வாராந்த சஞ்சிகை

நவம்பர் 04 - 10, 2015

# சுடர் ஒளி

பக்கம் 24

விலை 30/-



முதல்வர் சி.வி.விக்னேஸ்வரனை சர்வதேச பெண்கள் விவகாரங்களுக்கான அமெரிக்க தூதுவர் கத்தரின் ருசல் சந்தித்தபோது...

# கடலோனியர்களின் சுதந்திரத் தாகம்




யாழ்.முஸ்லிம் மக்களின் கவனயீர்ப்பு போராட்டத்தின் போது......



# எரிமலைக்கு மூடி

ரஷ்யாவின் கிழக்கு பகுதியில் உள்ள கிளியுசெவ்ஸ்கியா சோப்கா பெரிய எரிமலையின் முகட்டை வேற்றுகிரவாசிகளின் வாகனம் பறக்கும் தட்டு போன்ற வடிவை கொண்ட மேக திரள்கள் மூடி இருந்தது. இது இயற்கையாகவே அமைந்து உள்ளது.இந்த இயற்கை காட்சியை அழகாக புகைப்படம் எடுத்து உள்ளனர்.காற்றின் திசையை கணக்கு வைத்து இந்த அரிய காட்சி நிகழ்ந்து உள்ளது



# மன்னித்த யானைகள்





தாய்லாந்தின் 'காவோ' தேசிய பூங்காவில் வீதியோரமாக யானைகள் நடந்து சென்றுக்கொண்டிருக்கும் போது, அவற்றை மோட்டார் சைக்கிளில் செல்பவர் கடந்து போக முயல்கிறார். அவரின் வண்டி அதிக சத்தத்தை எழுப்புகிறது. இதனால் தொந்திரவிற்கு ஆளான ஒரு யானை அவரைத் தாக்கும் நோக்கில் வேகமாகச் செல்கிறது. இதைக் கண்ட மற்ற யானைகளும் உயிரை நடுங்கவைக்கும் பிளிறலுடன் அவரை நோக்கி ஓடுகின்றன.

தான் சுற்றி வளைக்கப்பட்டதைக் கண்டு பயந்து போன அவர் வண்டியைப் போட்டுவிட்டு, சினம் கொண்ட யானைகளிடம் உயிர்ப் பிச்சை கேட்டு, கைகூப்பி நிற்கிறார். இதில் ஆச்சரியப்படும் விஷயம் என்னவென்றால், அந்த யானைக்கூட்டம் அவரை ஒன்றும் செய்யாமல் விட்டுவிட்டது என்பது தான்.



# எட்டுக்கால் நாய்க்குட்டி

பசிபிக் பெருங்கடலில் உள்ள 'டோங்கா' என்ற தீவில் 8 கால்கள் கொண்ட விசித்திரமான நாய்க்குட்டி ஒன்று பிறந்திருக்கிறது.

டோங்கா தீவில் உள்ள வைனி என்ற இடத்தில் 5 குட்டிகளுடன் சேர்ந்து இந்த அதிசய நாய்க்குட்டி பிறந்தது. இந்த நாய்க்குட்டியின் வயிற்றுக்குக் கீழே ஒட்டியுள்ள அதன் 2 உடல்களின் காரணமாக 2 பின்னங்கால்களும் 2 வால்களும் உள்ளது. உடலின் மேற்புறத்தில், முன்புறம் ஒரு முன்னங்கால், பின்புறம் மற்றொரு முன்னங்கால் என ஒட்டு மொத்தமாக எட்டு கால்களுடன் இந்த விசித்திர நாய்க்குட்டி பிறந்தது.

ஆடு மற்றும் பூனைகள் இது போன்று விசித்திரமான தோற்றத்துடன் பிறப்பது வழக்கம். ஆனால் நாய்கள் இது போன்ற விசித்திர தோற்றத்துடன் பிறப்பது மிகவும் அபூர்வமானது.

இதுகுறித்து நாயின் உரிமையாளரான மலோனி கூறுகையில் இந்த அதிசய நாய்க்குட்டி பிறந்த்தும் தீவில் உள்ள மக்கள் அனைவரும் ஆச்சரியத்தில் உறைந்துவிட்டனர். நான் இதற்கு முன்பு எங்கும் 8 கால்கள் கொண்ட ஒரு குட்டி நாயைப் பார்த்தது கிடையாது. இந்தக் குட்டி பிறந்ததும் கத்துவதற்குக் கூட சிரமப்பட்டது. தீவில் கால்நடை மருத்துவ வசதிகள் இல்லாத காரணத்தால் பிறந்த சில மணி நேரங்களிலேயே இந்த மண்ணை விட்டு மறைந்தும் விட்டது எனத் தெரிவித்தார்.

- பிரமன்



# அதிகாரத்துக்குப் பிடிக்காத அகராதி

அவன் மிகப்பெரும் கொடுங்கோலன். எதற்கெடுத்தாலும் மக்கள் மீது புதுப்புது வரிகளை விதித்து அதன் மூலம் கிடைக்கும் பணத்தில் தான் சுகபோகமாக இருப்பதையே எண்ணமாகக் கொண்டவன். மக்களும் எவ்வளவு காலம்தான் பொறுத்திருக்க முடியும். அதனால் மன்னனின் கொடுங்கோன்மை பற்றி தமக்குள் கதைக்கத் தொடங்கினர். துணிவு வரப்பெற்ற சிலர் பொதுவெளியிலும் அதுபற்றிப் பேச முயல, அடுத்தடுத்த நாளே அவர்கள் கழுவிலேற்றப்பட்டனர். சிலர் இரவோடிரவாகக் காணாமல் போயினர். சிலரின் உயிரற்ற உடலங்களே கிடைத்தன.

மற்றையவர்களின் உடலங்கள் மண்ணுக்குள்ளோ, கடலுக்குள்ளோ மறைக்கப்பட்டிருப்பதாக மக்கள் பேசிக்கொண்டனர்.

தனக்கெதிராக மக்கள் எதுவும் பேசக்கூடாது என்பதற்காக எல்லோரின் நாக்குகளையும் பெரிய பூட்டு ஒன்றினால் பூட்டி, அதன் திறப்பை தனது பாதுகாபிலேயே வைத்திருந்தான் மன்னன். இதனால் உண்பதற்கு கூட மன்னனின் அனுமதி பெற்று, திறப்பை வாங்கி, உண்டு முடிந்ததும் மீண்டும் திறப்பை அங்கேயே ஒப்படைத்துவிட்டு வரவேண்டும். இவ்வாறு அனுமதி கொடுக்கும் அதிகாரத்தை பல அதிகாரிகளுக்கு மன்னன் வழங்கி இருந்தான்.

அரசன் எவ்வழியோ அதிகாரிகளும் அவ்வழியே. அவர்களும் தங்கள் பங்குக்கு ஒவ்வொரு முறையும் திறப்பை வழங்குவதாயின் ஒரு குறித்த தொகையை கப்பமாகப் பெற்று தங்கள் செல்வத்தைப் பெருக்கினர். கூடுதலாகப் பணம் கொடுப்பவர்களுக்கு சலுகைகளும் அதிகரித்தன. அப்படிப் பணம்கொடுத்தவர்கள் சில நாட்கள் திறப்பை வீட்டுக்கு கொண்டு செல்லவும் அனுமதிக்கப்பட்டனர். ஆனால் பணம் கொடுக்க முடியாத ஏழைகளுக்கோ சில நாள்களில் உணவை உண்ணும் நேரத்தில் கூட பூட்டைத் திறக்க அதிகாரிகள் அனுமதி மறுத்தனர்.

மன்னனுக்கு எதிராக மக்கள் எழுச்சி கொள்ளத் தொடங்கினர். மன்னனின் அரசவையில் இருந்த மந்திரிக்கு இந்த விஷயம் காதில் எட்டியது. அவருக்கும் இராஜ்ஜியத்தை அடைவதில் நீண்டகாலமாக ஒரு கண். இந்த எழுச்சியைத் தக்கபடி பயன்படுத்த முடிவெடுத்தார். மன்னனின் கொடுங்கோலை ஒழிக்கக் கிளம்பிய மக்களுக்கு தலைமையேற்பதாக அரசவையில் அவர் அறிவிக்க, அங்கிருந்த எல்லோருக்கும் பேரதிர்ச்சி. கொடுங்கோல் மன்னனை எதிர்த்து இவன் என்ன செய்யப் போகிறான். மற்றவர்களைப் போல இவனும் மண்ணுக்குள் மாளப்போகிறான் என்றே அவர்கள் சொல்லிக் கொண்டனர்.

ஆனால் மக்கள் அலைக்கு முன்னால் மன்னனின் எல்லாச் சதிகளும் ஊதப்பட்டன. மந்திரி தலைமையேற்க வந்தது மக்களுக்கு பேரானந்தம். தமக்கொரு தலைவன் கிடைத்து விட்டதாகப் புளகாங்கிதமடைந்தனர். மக்கள் சக்தி பெருகியது. இத்தனைக்கும் மந்திரி எதுவுமே செய்துவிடவில்லை. தலைமையேற்பதாக அறிவித்து மட்டுமே அவரது வேலை .மிகுதியை மக்களே பார்த்துக் கொண்டார்கள். புரட்சிக்கு முன்னால் கொடுங்கோல் மன்னனால் எதுவுமே செய்ய முடியவில்லை. சரணடைந்தால், உயிராவது மிஞ்சும். ஆகவே ஈற்றில் கொடுங்கோல் அரசன் தன் மணிமுடியை, புரட்சிக்கு தலைமையேற்ற மந்திரிக்கு சூட்டிவிட்டு, தன் சொந்த ஊருக்கு ஓடிப்போனான்.

தங்களின் அடிமைத் தளை அகன்றுவிட்டதாக மக்கள் ஆடிப்பாடினர். தங்கள் நாக்குகளில் தொங்கிக் கொண்டிருந்த பூட்டுகளை அகற்றினர். எல்லாமே நல்லபடியாக நடந்தது. எல்லாம் கொஞ்சக் காலம் தான். அதன் பின்னர் புதிய மன்னன் பழைய வரிகளை நீக்கினான். மக்களின் ஆரவாரம் அதிகரிக்க, சட்டென புதிய சில வரிகளை புதிய மன்னன் விதித்தான். இவனும் அவனைப் போலவே வரிக்கு மேல் வரி விதிக்கிறானே என்று மக்கள் பரவலாகக் கதைக்கத் தொடங்கினர். ஒருநாள் மன்னன் மக்களுக்கு முன் தோன்றினான்.

நான் உங்களைக் கொடுங்கோல் ஆட்சியில் இருந்து விடுவித்தவன். அந்த நன்றிக்கடன் இல்லாமல் நரம்பில்லாத நாக்கால் என்னைக் கண்டபடி வசைபாடுகிறீர்களே. இதை எப்படி நான் பொறுத்துக் கொள்வது? ஆனால் நான் கொடுங்கோலன் அல்ல. இல்லாவிட்டால் நான் இப்போதே உங்கள் நாக்குகளை துண்டித்திருக்க முடியும். அல்லது பூட்டுகளால் பூட்டியிருக்க முடியும். ஆகவே நல்லாட்சியை நிலைநாட்டும் பொருட்டு நாளை முதல் உங்கள் வாய்களை தைத்துவிட ஆணையிட்டுள்ளேன் என்று அறிவித்தான்.

எண்ணெய்ச் சட்டியில் இருந்து தப்பிக்க அடுப்புக்குள் விழுந்த தங்களின் நிலையை எண்ணி மக்கள் துயருறத் தொடங்கினர்.

***

இதொன்றும் அம்புலிமாமாக் கதையல்ல. இன்றைய உலகில் ஆட்சியில் இப்படிப்பட்ட சம்பவங்களே தொடர்ச்சியாக நடைபெற்று வருகின்றன. அதிலும் குறிப்பாக இலங்கையில் மேற்சொன்ன சம்பவங்களே நடந்தேறத் தொடங்கியுள்ளன. மஹிந்த ராஜபக்ஷவின் குடும்பச் சர்வதிகாரத்துக்கு முடிவு கட்டவே மக்கள் மைத்திரி பாலவையும், ரணில் தலைமையிலான அரசையும் கொண்டுவந்தனர். ஆனால் மஹிந்த காலத்துக் காட்சிகளே மறு உருவாக்கம் செய்யப்பட்டு இலங்கை மண்ணில் .. அரங்கேறும் அவலம் தொடர்கின்றது. இதற்கு மிக நல்ல உதாரணம், அண்மையில் எச்.என்.டி.ஏ மாணவர்களின் ஆர்ப்பாட்டமும், பொலிஸ் அதற்கெதிராக எடுத்த நடவடிக்கைகளும் தான்.

எப்படி மாணவர்களின் உரிமைக்குரலை ஈவிரக்கமின்றி மஹிந்த அரசு, நசுக்கியதோ அதற்குச் சற்றும் குறையாத வகையில் மைத்திரி காலத்துப் பொலிஸும் மாணவர்கள் மீது வெறிகொண்டு பாய்ந்துள்ளது.

நான்கு வருடக் கற்கைநெறியின் பின்னர் பட்டத்தை வழங்கும் வகையில் எச்.என்.டி.ஏ பாடநெறி அமைந்திருந்தது.

ஆனால் தனியார் மயமாக்கலை கல்வியில் உள்நுழைப்பதை முழுமூச்சாகக் கொண்டிருந்த மஹிந்த அரசு, இந்த எச்.என்.டி.ஏ கற்கை நெறியை தன் பரிசோதனைக் களமாக்க நினைத்தது.

இனிமேல் எச்.என்.டி.ஏ கற்கை நெறி மூன்று வருடங்கள் கொண்ட டிப்ளோமாவாகவே இருக்கும். மூன்று வருடக் கற்கையின் பின்னர் பட்டம் பெற விரும்பினால் , மேலதிக பணத்தைக் கட்டணமாகச் செலுத்தி கற்கலாம் என்றரீதியில் மாற்றங்களைக் கொண்டு வந்தது. அதாவது தனியாரிடம் கட்டணம் செலுத்தி இந்தக் கற்கை நெறியைப் பட்டப்படிப்பாகத் தொடரலாம். இது தனியார் பல்கலைக்கழகங்களுக்கு இலங்கையில் அச்சாரம் போடும் செயல் என்று மாணவர்கள் கொந்தளித்தனர். அரசின் முடிவுக்கு எதிராகப் போராட்டங்களில் குதிக்க முற்பட்டனர்.

எனினும் ஆட்சி மாற்றம் காரணமாக மாணவர் போராட்டங்களும் ஆறப்போடப்பட்டிருந்தன. மஹிந்த விட்ட தவறுகளை மைத்திரி திருத்துவார் என்று மாணவர்கள் காத்திருந்து காலம் போனதுதான் மிச்சம். உருப்படியாக எதுவுமே நடக்கவில்லை. அதனால் தான் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு முன்னால் பெருமெடுப்பிலான ஆர்ப்பாட்டத்தில் மாணவர்கள் இறங்கினர்.

மாணவர் சக்தியே பல நாடுகளின் தலைவிதியை மாற்றியெழுதி இருக்கின்றது. அதனால் எந்தவொரு அதிகார பீடமும் மாணவர்களின் போராட்டங்களை முளையிலேயே கிள்ளி எறிவதை வழக்கமாகக் கொண்டுள்ளன. மஹிந்த என்றாலும், மைத்திரி என்றாலும் மாணவர் போராட்டங்களை ஆட்சியாளர்கள் ஒரே மாதிரியே கையாள்வர்கள்.

கடந்த காலங்களில் தென்னிலங்கையில் மாத்திரமன்றி யாழ்ப்பாணம் வரை மாணவர் போரட்டங்களை மஹிந்த அரசு 'அடித்து அமத்தியது'. அதிலும் தமது உரிமைக்காக அமைதியான முறையில் பல்கலைக் கழகச் சூழலில் பேரணியாகப் புறப்பட்ட மாணவர்களை வலிந்து தாக்கி, அவர்களை ஓட ஓட இராணுவமும் பொலிஸும் விரட்டியிருந்தன. அதேபோன்று தென்னிலங்கையிலும் அப்போதைய உயர் கல்வியமைச்சராக இருந்த (இப்போதும் வேறு துறைக்கு அமைச்சர்தான்) எஸ்.பி. திஸநாயக்கவுக்கு எதிரான ஆர்ப்பாட்டத்தை மேற்கொண்ட மாணவர்களும் பொலிஸால் பிடித்துச் செல்லப்பட்டிருந்தனர்.

அத்தகைய காட்சிகளின் நீட்சி மைத்திரி ஆட்சியில் இருக்காது என்றே மாணவர்கள் நம்பினர். நல்லாட்சி, கருத்துச் சுதந்திரம், ஜனநாயக வெளி என்ற பதங்கள் இப்போதைய அரசால் அடிக்கடி பயன்படுத்தப்படுவதால், தமது கருத்து வெளிப்பாட்டுக்கு மதிப்புக் கொடுத்து, ஆக்க பூர்வமான நடவடிக்கைகளை அரசு எடுக்குமென்பதே மாணவர்களின் எண்ணமாக இருந்தது. ஆனால் 'மைத்திரியும் மஹிந்தவும் ஒண்ணு. இதை அறியாதவன் வாயிலே மண்ணு' என்பதுதான் கடைசியில் தெரியவந்தது.

உண்மையில் இப்போது வெளித்தோற்றத்துக்கு நல்லாட்சி அரசு என்ற தோற்றப்பாடு தென்பட்டாலும், மஹிந்த அரசைப் போலவே குடும்ப ஆதிக்கங்களும், மக்கள் நலன் சாராச் செயற்பாடுகளுமேதொடர்கின்றன. முன்னர் மஹிந்த குடும்பம் மட்டுமே நாட்டை உறிஞ்சியது. ஆனால் இப்போது அமைச்சர்களின் குடும்பங்களும் நாட்டைச் சூறையாடக் கிளம்பிவிட்டன. மஹிந்தவின் ஆட்சிக் காலத்தில் இருந்ததை விடவும் அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் உயர்ந்தும் விட்டன. இவற்றையெல்லாம் தடுத்து நிறுத்தும் திராணி மைத்திரி அரசுக்கு இருப்பதாகத்தெரியவில்லை.

இன்னும் ஐந்து வருடங்கள் இப்படியே தங்கள் தலைவிதியை மக்கள் நொந்து கொண்டு வாழவேண்டியதுதான். அதற்குப் பிறகு இன்னொரு அரசு வரும். அதுவும் இப்படித்தான் மக்களையும், மாணவர்களையும் நசுக்கியே தன் மணிமகுடத்தை சூடிக்கொள்ளும். ஏனெனில் அதிகாரத்துக்கு அகராதியில் பிடிக்காத வார்த்தைகள் மக்கள், மாணவர்கள், புரட்சி என்பன தான்.



ஜி.எஸ்.எஸ்.

# கிரீடத்தை இழக்கும் கிரீஸ் 10

'முதல் சர்வதேச ஒலிம்பிக் விளையாட்டுக்களை ஏதென்ஸ் நகரில் தொடங்கியதாக நான் அறிவிக்கிறேன்' இப்படிக் கூறி, ஏப்ரல் 16, 1896 அன்று கிரீஸ் நாட்டு முதலாம் ஜோர்ஜ் மன்னர் நவீன ஒலிம்பிக்ஸுக்கு பிள்ளையார் சுழி இட்டார்.

மொத்தம் 14 நாடுகள் கலந்து கொண்டன. அவை ஆஸ்திரேலியா, ஆஸ்திரியா, பல்கேரியா, சிலி, டென்மார்க், பிரான்ஸ், ஜெர்மனி, பிரிட்டன், கிரீஸ், ஹங்கேரி, இத்தாலி, ஸ்வீடன், சுவிட்சர்லாந்து, அமெரிக்கா.

ஆனால் தடகள வீரர்களில் பெரும்பாலானவர்கள் கிரேக்கர்களாகவே இருந்தார்கள். அந்த ஒலிம்பிக்ஸின் உச்சமாக அது தொடங்கிய பதினோராவது நாள் கருதப்பட்டது.

அன்று நீண்ட தூர நடை ஓட்டப் பந்தயம் நடைபெற்றது. அதைக் கண்டுகளிக்க ஒரு லட்சம் மக்களுக்கு அதிகமாக வந்திருந்தனர். மராத்தன் நகரிலிருந்து ஏதென்ஸ் நகரம் வரை உள்ள சுமார் 25 மைல் தூரத்தைக் கடந்தாக வேண்டும். அதில் வென்றது கிரேக்க தடகள வீரரான ஸ்பிரிடோன் லூயி. உள்ளூர் மக்களின் உற்சாகத்திற்கு கேட்கவா வேண்டும்! ஒரு விளையாட்டைக் காண மிக அதிகம் பேர் கூடியது அதுவரை அன்றைய தினத்தில்தான்.

மிகவும் வெற்றிகரமான விளையாட்டு வீரராக ஜெர்மனி நாட்டைச் சேர்ந்த கார்ல்ஸ் ஷுமேன் விளங்கினார். குத்துச் சண்டை, ஜிம்னாஸ்டிக்ஸ் இரண்டிலுமாக நான்கு போட்டிகளில் வென்றார் இவர்.

கிரீஸ் நாட்டு மன்னரும் மற்றும் பலரும் தொடர்ந்து தங்கள் நாட்டிலேயே நான்கு வருடங்களுக்கு ஒரு முறை ஒலிம்பிக்ஸ் நடைபெற வேண்டும் என்று விருப்பப்பட்டனர்.

ஆனால் நவீன ஒலிம்பிக்ஸுக்கு வித்திட்ட கூபெர்டின் உலகெங்கும் ஒலிம்பிக்ஸ் பந்தயங்கள் நடைபெற வேண்டும் என்பதில் தீர்மானமாக இருந்தார். அதனால் 108 வருடங்களுக்குப் பிறகு 2004ல்தான் ஒலிம்பிக்ஸை நடத்தும் வாய்ப்பு கிரீஸுக்கு மீண்டும் கிடைத்தது.

உலக சாதனை எதுவும் முதல் நவீன ஒலிம்பிக்ஸில் முறியடிக்கப்படவில்லை. தலைசிறந்த போட்டியாளர்களில் சிலர் மட்டுமே ஒலிம்பிக்ஸில் கலந்து கொண்டது ஒரு முக்கிய காரணம்.

அன்றைய வெற்றியாளர்களுக்குக் கிடைத்த பரிசுகள் கொஞ்சம் மாறுபட்டிருந்தன. முதலிடத்தைப் பிடித்தவருக்கு வெள்ளிப் பதக்கம், ஒரு ஒலிவ் கிளை மற்றும் சான்றிதழ் வழங்கப்பட்டன. இரண்டாம் இடத்தைப் பிடித்தவருக்கு தாமிரப் பதக்கம் மற்றும் சான்றிதழ். மூன்றாவதாக வந்தவர்களுக்கு அறிவிப்போடு சரி, பதக்கம் கிடையாது. மராத்தான் பந்தயத்தை வென்ற ஸ்பிரிடோன் லூயிக்கு ஒரு சிறப்புக் கோப்பை வழங்கப்பட்டது.

நீண்ட தூர நடை ஓட்டப் பந்தயம் நடைபெற்றது. அதைக் கண்டுகளிக்க ஒரு லட்சம் மக்களுக்கு அதிகமாக வந்திருந்தனர். மராத்தன் நகரிலிருந்து ஏதென்ஸ் நகரம் வரை உள்ள சுமார் 25 மைல் தூரத்தைக் கடந்தாக வேண்டும். அதில் வென்றது கிரேக்க தடகள வீரரான ஸ்பிரிடோன் லூயி. உள்ளூர் மக்களின் உற்சாகத்திற்கு கேட்கவா வேண்டும்! ஒரு விளையாட்டைக் காண மிக அதிகம் பேர் கூடியது அதுவரை அன்றைய தினத்தில்தான்.

முதல் ஒலிம்பிக்ஸ் முடிவுக்கு வந்ததாக மன்னர் அறிவிக்க, கிரேக்க நாட்டு தேசிய கீதம் இசைக்கப்பட, மக்கள் உற்சாகத்துடன் கலைந்து சென்றனர்.

கிரேக்கம் சுதந்திரம் பெற்றிருந்தது என்றாலும் அது பெயரளவில்தான். அங்கொன்றும் இங்கொன்றுமாக சில கிரேக்கப் பகுதிகள் ஓட்டமான் துருக்கியர் வசம் இருந்தன. 1912இல் க்ரேட் மற்றும் தெற்கு மாசிடோனியா ஆகிய பகுதிகளை கிரீஸ் மீண்டும் தன் வசம் கொண்டு வந்தது. இந்தப் போர் பால்கன் யுத்தம்" என்று குறிப்பிடப்படுகிறது. ஏபிரஸ், வடக்கு ஏஜியன் தீவுகளும் கிரீஸ் வசம் மீண்டும் வந்தன.

1924இல் மன்னராட்சி வேண்டாம், குடியரசு தான் தேவை என்று முடிவெடுக்கப்பட்டது. ஆனால் 1935இலேயே மீண்டும் மன்னராட்சி உதயமானது. அதற்கு அடுத்த ஆண்டு மெடக்ஸஸ்' என்பவர் கிரீஸின் பிரதமர் ஆனார். இவர் வலதுசாரி கருத்துகள் கொண்டவர். சர்வாதிகாரியும்கூட.

கிரேக்கச் சரித்திரத்தின் அடுத்த கட்டமாக நாம் 1948 ஐ எடுத்துக் கொள்ளலாம். அதற்கு முன் கிரேக்கத்தில் மன்னர் ஆட்சி முடிந்து, குடியரசு உண்டாகி, பின் மீண்டும் சர்வாதிகாரம் ஏற்பட்டது. இராணுவத் தலைவர் மெடக்ஷாஸ், ஒரு பிரதமரை நியமித்தார்.

இந்த நிலையில்தான் இரண்டாம் உலகப்போர் வந்தது. இத்தாலிய அதிபர் முசோலினி கிரீஸ் மீது படையெடுத்தார். இது பலருக்கும் வியப்பான ஒன்றாகவே இருந்தது. சொல்லப் போனால் முசோலினி கூட்டாளியான ஹிட்லருக்கேகூட இது அப்போது எதிர்பார்த்திராத ஒன்றுதான்.

"முசோலினி செய்தது முட்டாள்தனம்" என்றார் ஹிட்லர். கிரீஸ் மீது கொண்ட கருணையினால் அல்ல. போர்த் தந்திரம் என்ற கோணத்தில்தான் இந்தக் கருத்தை வெளிப்படுத்தினார். முசோலினி வடக்கு ஆப்பிரிக்காவில் தான் தன் கவனத்தைச் செலுத்தி இருக்க வேண்டும். எகிப்தை நோக்கித்தான் தன் படையை அனுப்பி இருக்க வேண்டும் என்பது அவரது எண்ணம்.

என்றாலும் முசோலினி கிரீஸ் மீது படையெடுக்க வேண்டும் என்ற தனது தீர்மானத்திலிருந்து பின்வாங்கத் தயாராக இல்லை. இத்தனைக்கும் அவரது இராணுவத் தலைவர்களே இதுகுறித்து எச்சரித்தார்கள். இதற்கு முக்கிய காரணம் கிரீஸ் ஒரு மலைப்பாங்கான பகுதி. அங்கு போரிடுதல் கஷ்டம். மலைப் பகுதியில் முன்னேறிவரும் எதிரணி வீரர்களை மேற்புறம் இருக்கும் உள்நாட்டு வீரர்களால் சுலபமாக வீழ்த்த முடியும். தவிர அப்போது மழைக் காலமாகவும் இருந்தால் போரிடுவது மிகவும் சிரமமாக இருக்கும். மேலும் கிரீஸ் இராணுவத்தையும் குறைத்து மதிப்பிட்டுவிட முடியாது.

இருந்தும்கூட முசோலினி மிகவும் தீர்மானமாக இருந்தார்.

(வளரும்)



இரண்டாம் உலகப் போரில் இத்தாலியின் தாக்குதலை எதிர்த்து தீவிரமாகப் போரிட்ட கிரீஸ் இராணுவ வீரர்கள்.



## முதல் வகுப்பில் பயணம் செய்த நாய்

அமெரிக்கன் விமான நிறுவனத்தில் ஒரு செல்லப்பிராணி பயணிகள் விமான வரலாற்றிலேயே முதன்முறையாக முதல் வகுப்பிபல் பயணம் செய்த உலகின் அதிக எடைகொண்ட செல்லப்பிராணி நாய் என்ற பெருமையை பெற்றுள்ளது.

இதுவரை விமான பயணம் செய்த பயணிகளிலேயே இதுதான் அதிக எடைகொண்ட பயணியாகவும் இருக்கும் என்றும் கருதப்படுகின்றது.

இந்த நாய் விமான நிலையத்தில் தனது சொகுசு படுக்கையின் மீது படுத்தபடி உல்லாசமாக உரிமையாளரால் ரொலி வண்டியில் வைத்து இழுத்து வரப்பட்டது. விமான நிலைய பணியப் பாணியாளர்கள் முதல் அங்கு வந்த பயணிகள் வரை அனைவரையும் இந்தப் பெரிய நாய் கவர்ந்தது.

இந்த நாயின் உரிமையாளர் இரண்டு முதல் வகுப்பு பயணச்சீட்டுகளை வாங்கிக்கொண்டு தனது நாயுடன் பயணித்ததாக அதிகாரிகள் தெரிவித்தனர்.



## நாற்காலி இல்லாமல் காற்றில் உட்காருங்கள்..!

**நா**ள் முழுதும் நின்று கொண்டே வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு அதிநவீன தொழில்நுட்பம் கொடுக்கும் பரிசு தான் - 'பயோனிக்' காற்சட்டை (Bionic Pants), அதாவது 'சேர்லெஸ்' கதிரை (Chairless Chair)..!

நோனீ (Noonee) நிறுவனம் தயாரித்துள்ள இந்த நாற்காலியை, நாம் காற்சட்டை போல் அணிந்து கொள்ள வேண்டும். ஒரு காலுக்கு ஒரு 'பயோனிக்' காற்சட்டை என்று நாற்காலி இன்றிக் காற்றில் அமர்வதற்கு ஒரு சோடி 'பயோனிக்' காற்சட்டைகளை அணிந்து கொள்ள வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது..!

இடுப்பின் எடையை குதிகாலுக்கு அனுப்பி உட்காந்து இருப்பது போல உணர செய்யும் தொழில்நுட்பத்தின்படி வடிவமைக்கப்பட்டுள்ள இந்த 'பயோனிக்' காற்சட்டைகளை அணிந்து கொண்டு சாதாரணமாக நடக்கவும், ஓடவும் முடியும் என்பதும் குறிப்பிடத்தக்கது..!

நோனீ நிறுவனத்தின் சி.இ.ஓ-வான (CEO) கெயித் கன்னுரா (Keith Gunura) தன் 17 வயதில் நீண்ட நேரம் நின்று கொண்டே பொதியிடும் வேலை செய்தவர் ஆவார், தொழிலாளியின் அந்த வலியை அடிப்படையாக கொண்டு தான் 'பயோனிக்' காற்கட்டை உருவாக்கப்பட்டுள்ளதாம்..!

## நேர்மைக்குக் கிடைத்த வெற்றி

தாய்லாந்தில் வசிக்கும் 17 வயது கனித்தா பசாங், சமீபத்தில் 'மிஸ் அன்சென்சார்ட் நியூஸ் தாய்லாந்து 2015' என்ற அழகி பட்டத்தை வென்றிருக்கிறார். மிகவும் ஏழ்மை நிலையில் இருக்கும் கனித்தா, அழகி பட்டம் வென்றது எல்லோரையும் வியப்பில் ஆழ்த்தியிருக்கிறது. கனித்தாவின் தாய் குப்பைகளைச் சுத்தம் செய்யும் பணியை செய்து வருகிறார். அழகி பட்டம் வாங்கிய கையோடு தன் அம்மாவைத் தேடி வந்தார் கனித்தா. வீதிகளில் குப்பைகளைச் சுத்தம் செய்துகொண்டிருந்த அம்மாவின் கால்களில் விழுந்து வணங்கினார். இந்தக் காட்சியைக் கண்ட அனைவரின் கண்களிலும் கண்ணீர் நிறைந்துவிட்டது.










# சுடர் ஒளி

வாராந்த சஞ்சிகை



sudarolijaffna@gmail.com

361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 021 492 7419


## பரவி வரும் பாரிசவாத நோய் மருத்துவம் தக்கவேளை தேவை

போதிய உடற்பயிற்சி இன்மையால், மிகப் பலர் பாரிசவாத நோயினால் பாதிக்கப்படும் ஆபத்துக் குறித்து வைத்திய வட்டாரங்கள் எச்சரித்துள்ளன.

முன்னர் எல்லாம், குடாநாட்டின் இளையோரும் நடுத்தர வயதினரும், துவிச்சக்கர வண்டியிலேயே, நீண்ட பெரும் தூரத்துக்கும் பயணம் செய்வதே வழமையாக இருந்தது.

ஆனால் இப்போது, மோட்டார் சைக்கிள்களும், கார்கள் மற்றும் வாகனங்களுமே வீட்டுக்கு வீடு பெருகி உள்ளன.

போதாக்குறைக்கு, நாளொன்றுக்குச் சராசரி ஆறு மணித்தியாலங்கள் தொலைக்காட்சியுடனும், கணனியுட னும் நாள்களைக் கழிக்கிறார்கள்.

இவை, எமது பிரதேசங்களில் வாழ்க்கைத் தரம் உயர்ந்து, மேல்நோக்கிச் செல்வதற்கான குறியீடுகள் என்று இனம் காண வைத்தாலும் —

மிகப் பெரும் எண்ணிக்கையானோர், பாரிசவாத நோயினால் பாதிப்புறும் ஆபத்தைத் தோற்றுவிப்பதாக, யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் மருத்துவர் த. சத்தியமூர்த்தி சுட்டிக்காட்டி உள்ளார்.

பாடசாலை மாணவர்கள், பல்கலைக் கழக மாணவர்கள் அரச உத்தியோகத்தர்கள் தமது உணவுப் பழக்கத்தை மாற்ற வேண்டும் என்றும் அவர் அறிவுறுத்தி இருக்கிறார். ஒருவர் பாரிசவாத நோயினால் பாதிக்கப்பட்டால், கைகள் கால்கள் இயங்காத தன்மை நிலைமை உண்டாகும். அவர் களைப் பராமரிப்பதற்கு, வீட்டில் உள்ள உறவினர்கள் பின் நிற்கக் கூடாது. மொத்தத்தில் ஊனமுற்றவர்களை ஒதுக்கி வைக்கும் நிலை, கடுகளவும் இருக்கக் கூடாது.

இதேவேளை, பாரிசவாத நோயினால் பாதிப்புறு வோருக்கு, உரிய நேரத்தில் - அதாவது நோய் ஏற்பட்ட நான்கரை மணித்தியாலத்திற்குள் - யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்த்தால், அவரை ஆபத்தில் இருந்து காப்பாற்றலாம் என்ற தகவலும் இப்போது வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

நரம்பியல் நிபுணர் அஜந்தா கேசவராஜா இந்தத் தக வலை, போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் தலைமை யில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் தெரிவித் திருந்தார்.

மேற்குறிப்பிட்ட நோய் குறித்து விழிப்புணர்வுக் குறை வாலேயே, அது குறித்த சிகிச்சையை நாடாதிருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

ஒருவரது பேச்சில் சடுதியாக ஏற்படும் திணறல், பேசும்போது அவரின் குரல் சடுதியாகக் குறைந்து போவது, திடீரெனக் கையில் ஏற்படும் சோர்வு, அந்த நோய்க்கான அறிகுறிகள் என்றும் நரம்பியல் நிபுணர் விவரித்துள்ளார். உலகளாவிய மட்டத்தில், 6 பேரில் ஒருவர் பாரிசவாதத்தின் தாக்கத்துக்கு ஆளாகின்றனர்.

அது மட்டுமா? உலகளாவிய ரீதியில் இடம்பெறும் மரணங்களில், பாரிசவாதத்தினால் உண்டாகும் இறப்பு இரண்டாவது இடத்தில் உள்ளது. இலங்கையில் நான் காவது வரிசையில் உள்ளது.

வடக்கில், அண்ணளவாகச் சுமார் பத்தாயிரம் பேர் இந்த நோயின் தாக்கத்துக்கு உள்ளானதாகக் கருதப் படுகிறது.

இது தொடர்பில் ஒரு சாராரின் உதவி மட்டும் போதாது. ஒரு கை ஓசை ஒலிக்கமாட்டாது. சமூகத்தில் உள்ள அனை வரும் கைகோர்க்க வேண்டும். அது தவிர்க்க முடியாத ஒன்றாகும்.

இங்கிலாந்தில் இருந்து ஸ்கொட்லாந்தும், ஸ்பெயினில் இருந்து கடலோனியாவும், இத்தாலியில் இருந்து வெனிசும், டென்மார்க்கில் இருந்து பரோத் தீவுகளும், பிரான்ஸில் இருந்து கோர்சிக்காவும், பெல்ஜியத்தில் இருந்து பிளண்டேர்சும், ஜேர்மனியில் இருந்து பவரியாவும் பிரிந்து செல்ல வேண்டும் என அந்தப் பகுதிகளில் வாழும் மக்களில் கணிசமான அளவு மக்கள் விரும்புகின்றார்கள்.

இதில் அண்மைக்காலங்களாக செய்திகளில் கடலோனியாவின் பிரிவினைவாதம் அதிகமாக அடிபடுகின்றது. 2010 ஆம் ஆண்டு கடலோனியர்களில் 20 வீதத்தினர் மட்டுமே பிரிவினைக்கு ஆதரவாக இருந்தனர். 2013 ஆம் ஆண்டு 48 வீதத்தினர் ஆதரித்தனர்.

### மொழிப்பிரச்சனைதான் முதற்பிரச்சனை

பொருளாதார அடிப்படையில் உலகின் 14 ஆவது நாடான ஸ்பெயின் 2008 ஆம் ஆண்டு ஏற்பட்ட உலகப் பொருளாதார வளர்ச்சியில் மோசமாகப் பாதிக்கப்பட்ட நாடுகளில் ஒன்றாகும். அந்தப் பொருளாதாரப் பிரச்சினையில் இருந்து விடுபட்டுக் கொண்டிருக்கையில் அங்கு கடலோ

## கடலோனியர்களின் சுதந்திரத் தாகம்



னிய மக்களின் பிரிவினைவாதம் மோசமாகிக் கொண்டிருக்கின்றது. 1714 ஆம் ஆண்டு கடலோனிய மக்கள் ஸ்பானிய ஆக்கிரமிப்பாளர்களிடம் தமது ஆட்சியுரிமையை இழந்தனர். கடலோனியர்களின் மொழியைப் பேசுவதும் கலாச்சாரத்தை பின்பற்றுவதும் சட்ட விரோதமாக்கப்பட்டது. கடலோனியர்கள் மோசமான அடக்கு முறையை அனுபவித்தது 1931 ஆம் ஆண்டு இராணுவப் புரட்சி மூலம் ஆட்சிக்கு வந்த பிரான்சிஸ்கோ பிராங்கோவின் தனியதிகாரியின் ஆட்சியில்தான். இவருக்கு இத்தாலியிலும் ஜேர்மனியிலும் உள்ள பாசிஸ்ட்டுகளின் ஆதரவும் இருந்தது. ஸ்பெயினில் 190 சித்திரவதை முகாம்களை வைத்திருந்த பிரான்சிஸ்கோ பிராங்கோ நான்கு இலட்சம் பேரைக் கொன்று குவித்தவர். பொது இடங்களில் கடலோனியர்களின் மொழி பேசுவதற்குத் தடை விதிக்கப்பட்டது. கடலோனியர்களின் நடனம் பொது இடங்களில் ஆடுவது கூடச் சட்ட விரோதமாக்கப்பட்டது. ஸ்பானிய மொழி அரச மொழியாக்கப் பட்டது. கடலோனியர்களது பெயர்கள் வியாபார நிறுவனங்களின் பெயர்கள் உட்பட எல்லாக் கடலோனியப் பெயர்களும் ஸ்பானிய மொழியில் மாற்றப்பட்டன. அடக்குமுறை ஆட்சியினால் பல கடலோனியர்கள் நாட்டை விட்டு வெளியேறினர். முதலில் பிரான்சிஸ்கோ பிராங்கோவின் ஆட்சிக்கு நாஜிகள் ஆதரவு வழங்கினாலும் இரண்டாம் உலகப் போரின் பின்னர் சோவியத்தின் பொதுவுடமைவாதம் ஸ்பெயினிற்கும் பரவாமல் இருக்க மேற்கு நாடுகள் அவருக்கு மறைமுக ஆதரவு வழங்கின. நேட்டோப் படைத்துறைக் கூட்டமைப்பிலும் ஸ்பெயின் இணைக்கப்பட்டது.

### வருமான மீள்பங்கீடு

ஏனைய ஸ்பானியப் பிரதேசத்தை மேற்கிலும் பிரான்ஸை வடக்கிலும் மத்திய தரைக் கடலைக் கிழக்கிலும் கொண்ட ஒரு முக்கோண வடிவ பிராந்தியமே கடலோனியா ஆகும். ஸ்பெயின் நாட்டின் வட கிழக்கு மாகாணமாகும். அங்கு 75 லட்சம் மக்கள் வாழ்கின்றனர். இவர்கள் மத்தியில் ஸ்பெயினில் இருந்து சுதந்திரம் பெற்று தனிநாடு ஆக செயற்பட வேண்டும் என்ற விருப்பம் 19 ஆம் நூற்றாண்டில் இருந்து உருவாகியது. இதற்கான போராட்டங் களும் அவ்வப்போது நடப்பதுண்டு. 2012ஆம் ஆண்டு ஸ்பானியத் தலைமை அமைச்சர் ரஜோய்யிற்கும் கடலோனிய மாநில ஆட்சியாளர் ஆதர் மார்ஸிற்கும் இடையிலே முறுகல் நிலை தோன்றியது. தலைமை அமைச்சர் கடலோனிய மாநிலத்தின் வருவாயில் இருந்து ஸ்பெயின் வறுமை மிக்க மற்றப் பிராந்தியங்களுக்கு கொடுக்கப்பட வேண்டும் எனக் கேட்டது முறுகலை உருவாக்கியது.

### வளம் மிக்க கடலோனியா

ஸ்பெயின் மற்றப் பிரதேசங்களுடன் ஒப்பிடுகையில் கடலோனியாவில்

- வேல்தர்மா

தொழிற்சாலைகளும், வர்த்தக நிறுவனங்களும் அதிக அளவில் உள்ளன. அங்குள்ள பார்சலோனாவில் ஸ்பெயினின் இரண்டாவது பெரிய விமான நிலையம் உள்ளது. அங்கு காணப்படும் துறைமுகம் 3 ஆவது பெரிய துறைமுகமாகும். உல்லாசப் பிரயாணிகளைக் கவரும் மத்தியதரைக்கடற் கரைப் பிரதேசமும் கடலோனியாவில் உண்டு. ஸ்பெயினின் மொத்த மக்கள் தொகையில் கடலோனி யர்கள் 16 விழுக்காடாகும். ஆனால் அவர்களது உற்பத்தி மொத்தத் தேசிய உற்பத்தியில் 20 விழுக்காட்டிற்கும் அதிகமாகும். ஸ்பானிய ஏற்றுமதியில் இருபத்தைந்து விழுக்காடு கடலோனியாவினதாகும். கடலோனியா பிரிந்து சென்றால் ஸ்பெயின் நாட்டின் கடன் பளு அதிகரிக்கும் எனச் சொல்லப் படுகின்றது. ஸ்பெயின் நாட்டின் கடன்பளுவில் எத்தனை விழுக்காட்டை கடலோனியா ஏற்கும் என்பது பேச்சு வார்த்தைகளால் மட்டும் தீர்க்கப்பட வேண்டிய ஒன்று. ஸ்பானிய அரசு பிரிவினையை ஏற்றுக் கொள்ளாத நிலையில் பேச்சுவார்த்தை மூலம் கடன் பளு பகிரப்படாமல் விட்டால் ஸ்பெயினின் கடன்பளு அதன் மொத்தத் தேசிய உற்பத்தியில் 125 விழுக்காடாக அதிகரிக்கும். ஏற்கனவே ஐரோப்பிய ஒன்றியத்தின் சிக்கன நடவடிக்கை நிபந்தனையால் ஏற்பட்ட பாதிப்பு மேலும் மோசமாகலாம்.

**கருத்துக் கணிப்பு**

2014ஆம் ஆண்டு கடலோனியப் பிராந்திய அரசு ஒரு கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பு நடத்த முன்வந்தது. அந்த கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பு அரசமைப்புக்கு விரோதமானது என நீதிமன்றம் தீர்ப்பளித்தது. அதைத் தொடர்ந்து கருத்துக் கணிப்பு என்ற பெயரைப் பொதுக் கலந்தாலோசனை என்னும் பெயரில் கடலோனியா பிரிந்து செல்வதா இல்லையா என வாக்கெடுப்பு நடந்தது. அதையும் அரசு தடை செய்த போது கடலோனிய அரசு தடையை மீறி வாக்கெடுப்பை நடாத்தியது. வக்களித்தவர்களில் 80 விழுக்காட்டினர் பிரிவினைக்கு ஆதரவாக வாக்களித்தனர். ஆனால் கடலோனியப் பிராந்திய அரசு எத்தனை விழுக்காடு மக்கள் வாக்கெடுப்பில் பங்கெடுத்தனர் என்பதை அறிவிக்கவில்லை. மொத்தக் கடலோனிய மக்களில் 42 விழுக்காடு மக்கள் மட்டுமே வாக்களிப்பில் பங்கு பற்றியதாகச் சொல்லப் படுகின்றது. பதினெட்டு வயதிற்குக் குறைந்தோரும் வந்தேறு குடிகளும் வாக்களிக்க அனுமதிக்கப் பட்டிருந்தனர்.

**Barcelona வை மிரட்டும் Madrid**




2015 ஆம் ஆண்டு ஜூலை மாதம் கடலோனியப் பிராந்தியக் கட்சிகள் தமக்குள்ளே ஓர் உடன்பாட்டிற்கு வந்தன. அதில் முக்கியமாக வலதுசாரி கொன்வேர்ஜென்சியாக் மக்களாட்சிக் கட்சியும் எஸ்கியூரா குடியரசு இயக்கமும் ஒத்துழைக்க முடிவு செய்தது முக்கியமானதாக அமைந்தது. அவர்கள் 2015 செப்டம்பர் 27 ஆம் திகதி நடந்த பிராந்திய அவைக்கான தேர்தலை தாம் தனிநாடாகப் பிரிந்து செல்வதற்கான ஒரு கருத்துக் கணிப்பாக கருதி மக்கள் தமக்கு ஆணையத் தரவேண்டும் எனச் சொல்லிப் போட்டியிட்டனர். அதில் வெற்றியும் பெற்றனர். ஆனால் அவர்கள் காத்திரமான வெற்றியைப் பெறவில்லை என ஸ்பானிய நடுவண் அரசு அறிவித்தது. ஆனால் கடலோயினப் பிரிவினைவாதிகள் தேர்தல் முடிந்தவுடன் தாம் 18 மாதங்களுக்குள் தனிநாட்டுப் பிரகடனம் செய்வோம் எனவும் தெரிவித்தனர். ஆனால் ஸ்பானிய நடுவண் அரசு அப்படி ஒரு பிரகடனம் செய்யுமிடத்து நீதி மன்றம் மூலம் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் கடலோயினியப் பிராந்திய அரசியல்வாதிகள் அவர்களது பதவிகளில் இருந்து நீக்கப்படுவார்கள் எனவும் எச்சரித்தது. அத்துடன் வாக்கெடுப்புச் செய்தமைக்காக கடலோனிய அதிபர் ஆதர் மாஸிற்கு எதிராக நீதிமன்ற உத்தரவை மீறியமை, பொது நிதியைத் தவறாகக் கையாண்டமை போன்ற குற்றங்களுக்காக ஆதர் மாஸ் மீது வழக்கும் தொடுத்துள்ளது.

ஸ்கொட்லாந்து பிரிவதா இல்லையா என்ற கருத்துக் கணிப்பு பிரித்தானிய அரசின் அனுமதியுடன் நடந்தது. அது கடலோனியர்களுக்கு ஒரு உந்து வலுவாக அமைந்தது. கடலோனியர்களின் பிரிவினை இனி ஸ்கொட்லாந்திற்கு உந்து வலுவாகலாம்.

**இங்கிலாந்தில் இருந்து ஸ்கொட்லாந்தும், ஸ்பெயினில் இருந்து கடலோனியாவும், இத்தாலியில் இருந்து வெனிசும், டென்மார்க்கில் இருந்து பரோத் தீவுகளும், பிரான்ஸில் இருந்து கோர்சிக்காவும், பெல்ஜியத்தில் இருந்து பிளண்டேர்சும், ஜேர்மனியில் இருந்து பவரியாவும் பிரிந்து செல்ல வேண்டும் என அந்தப் பகுதிகளில் வாழும் மக்களில் கணிசமான அளவு மக்கள் விரும்புகின்றார்கள்.**



# அக்கினிப் பெண்களும் எரியும் வாழ்வுக் குடில்களும்

- பிரம்ம ராட்சஸி





சமீபகாலமாக பெண்ணியம் என்பது அனைத்து தரப்பினரினது வாயிலும் முணுமுணுக்கப்படுகின்ற ஒரு சொல்லாகிவிட்டது. பால்நிலைச் சமத்துவத்தை நோக்கிச் செல்லவேண்டிய ஒரு பெரும் போராட்டம் அது.

தொழில்நுட்பம் வளர்ச்சி கண்டாலும் பெண்ணுக்கான விதிமுறைகள் கற்பு என்னும் அளவுகோல் இவற்றினது ஆதிக்கம் பெண்ணை இன்னும் சிறைப்படுத்தி வைத்திருக்கின்றது என்பதே பலரினதும் கருத்து.

அன்றொரு நாள் நானும் எனது தோழிகளும் 'கண்டீனில்' சாப்பிட்டு விட்டு ஆற அமர்ந்த நேரத்தில் ஒருத்தி இது பற்றிய ஒரு கருத்தைத் தொடக்கி வைத்தாள். அவள் அதற்கு முதல் நாள் ஒரு பெண்ணினுடைய வாழ்க்கை பற்றி தொலைக்காட்சியில் பார்த்திருந்தாள்.

சித்ரவதை முகாமில் ஒரு பெண் நிர்வாணமாக்கப்பட்டு அவளுடைய மாதவிலக்கான நாளில் வன்புணர்வுக்கு உள்ளாக்கப் பட்டு அப்போதுகூட அவள் உயிரை விடாமல் உறுதி யோடு இருந்தாள். அதன்பின் அவள் சமூகத்தில் ஒரு புனர் வாழ்வைக் கட்டமைக்கும்போது இந்த சமூகம் அவள் மீது போடும் பழிச் சொற்கள், அவளை இழி நிலையில் வைத்துப் பார்க்கும் பார்வை என்பன அவளைத் தற்போது உயிர்வரை சுடுவதாய் அந்தப் பெண் தன்னுடைய ஆதங்கத்தைப் பதிவு செய்துள்ளார் என உடைந்த குரலில் கூறினாள் தோழி.

உண்மைதான் சமூகத்தில் ஒரு பெண்ணிற்கு அநியாயம் நிகழ்ந்து விட்டதை அறிந்தும் மேலும் அந்த பெண்ணை வசைபாடி பெண் சார்ந்த சமூகமே அவளை ஒதுக்கி வைப்பதென்பது வன்புணர்வை விடக் கொடுமையான விடயம். அவளைச் சுட்ட தீ நம் கூரையைத் தொடும் வரை நாம் கைகட்டி வேடிக்கை பார்க்கவும் அதை விமர்சனம் செய்யவும்தான் முன்னிற்கின்றோம். இது பேசி, எழுதி சலித்துப் போன விடயம்.

இதே விஷயத்தை புதுமைப்பித்தன் சாபவிமோசனம் என்னும் சிறுகதையில் கூறுகின்றார். இந்திரனால் ஏமாற்றப்பட்டு கோதமனின் சாபத்துக்குள்ளான ராமன் கால் தூசி பட்டு மீண்டும் புனர்வாழ்வு பெறுகின்றாள்.

அதற்குப் பின் அவள் படித் துறைக்கு குளிக்கச் செல்வாள் ஒருநாள் அப்போது அங்கு நிகழும் காட்சி பின்வருமாறு குளித்துவிட்டுத் திரும்பிக் குனிந்த நோக்குடன், மனசை இழைய விட்டுக்கொண்டு நடந்துவந்து கொண்டிருந்தாள்.



எதிரே மெட்டிச் சப்தம் கேட்டது. ரிஷி பத்தினிகள் யாரோ! அவர்களும் நீராடத்தான் வந்துகொண்டிருந்தார்கள்.

அவளைக் கண்டதும் காணக் கூடாதவளைக் கண்டதுபோல ஒடி விலகி, அவளை விறைத்துப் பார்த்துவிட்டுச் சென்றார்கள்.

அவள்தான் அகலிகை என்பது தூரத்தில் கேட்டது. கோதமனுக்கு அன்று அடிவயிற்றில் பற்றிக் கொண்டு பிறந்த சாபத் தீயைவிட அதிகமாகச் சுட்டன அவ்வார்த்தை கள். அவள் மனசு ஒரேயடியாகச் சுடுகாடு மாதிரி வெந்து தகித்தது. சிந்தனை திரிந்தது. தெய்வமே! சாபவிமோசனம் கண்டாலும் பாப விமோசனம் கிடையாதா? என்று தேம்பினாள்.

இந்த நிலையில் தன்னை எவன் உயிர்ப்பித்து மறுவாழ்வு கொடுத்தானோ அவன் தன மனையாளை அக்கினிப் பிரவேசம் செய்யச் சொன்னான் என்பதை அறிந்ததும் அவர் கேட்டாரா? நீ ஏன் செய்தாய்? என்று கேட்டாள்.

அவர் கேட்டார்; நான் செய்தேன் என்றாள் சீதை, அமைதியாக.

அவன் கேட்டானா? என்று கத்தினாள் அகலிகை; அவள் மனசில் கண்ணகி வெறி தாண்டவ மாடியது. சீதை அரண்மனைக்குப் போவதற்காக வெளியே வந்தாள். அகலிகை வரவில்லை.

ராமன் மனசைச் சுட்டது; காலில் படிந்த தூசி அவனைச் சுட்டது.

அன்று ராமன் மனதுச் சுட்ட தீகூட நம்மில் எவர் மனதையும் என்றும் சுடுவதில்லை என்பதுதான் வேதனைக்குரிய விடயம். விதவைகள் மறுமணம் விவாகரத்தான பெண்களின் மறுமணம் இவற்றை கொண்டாட்டங்களாக ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்கும் நாம் அவர்களின் வாழ்க்கையைக் கொண்டாடுவதற்குத் தயாராயில்லை என்பதுதான் வருந்துதற்குரிய உண்மை.

இதே நிலையில் அநேகமான பிரச்சனைகளில் பெண்ணிற்குத் துணை நிற்க வேண்டிய இடத்தில் ஆண்களை விட பெண்களுக்கான பங்களிப்பு மிகவும் அவசியம். அதேசமயம் சமோகப் பிரக்ஞை என்பது பெண்களுக்கு மிக மிக அவசியம். சுற்றியுள்ள சமூகம் சார்ந்த எவ்வித உணர்வுமின்றி வெறும் அழகுசாதனப் பொருட்களுக்குள் ஆழ்ந்து போய் இருப்பதில்தான் நம் பெரும்பான்மையான பொழுதுகள் கழிகின்றது. ஒரு சமூகப் பிரச்னையை எவ்வாறு அணுக வேண்டும் என்பதை சமூகத்தின் ஆக்க கர்த்தாவான பெண் அறிந்திருக்க வேண்டும்.

சமீபத்தில் நடைபெற்ற வாணிவிழா ஒன்றில் இடம்பெற்ற பட்டிமன்றத்துக்கு கண்ணகியா சீதையா கற்பில் சிறந்தவள் என்னும் தலைப்பில் கண்ணகி கற்பில் சிறந்தவள் என்னும் தலைப்பின் கீழ் விவாதிப்பதற்கு கருத்துக்கள் கேட்டு ஒரு தங்கை

(18 ஆம் பக்கம் பார்க்க)



# கிரிக்கெட்டில் மண்டேலாவும் காந்தியும்

- சி.விமலன்

சர்வதேச கிரிக்கெட் உலகில் விளையாட்டு வீரர்களைக் கௌரவிக்கும் விதமாக பல்வேறு செயற்பாடுகள். இடம்பெற்று வருகின்றன. வீரர்களின் பெயர்களை மைதானத்திற்குச் சூட்டுதல், வீரர்களின் பெயர்களில் விருதுகள் வழங்கல், வீரர்களின் பெயரில் கிரிக்கெட் தொடர் நடத்துதல், வீரர்களின் பெயர்களில் அறக்கட்டளை நிறுவுதல் போன்றவற்றை உதாரணமாகக் கூறமுடியும். அதிலும் வீரர்கள் வாழும் போதே கௌரவிக்கப்படவேண்டும் என்ற வகையில் அவர்களது பெயர்களில் கிரிக்கெட் தொடர் நடத்துவது அவர்களுக்குரிய உச்ச பட்ச மரியாதையாகக் கருதப்படுகின்றது.

அந்தவகையில் தற்போது நடை பெற்றுவரும் சர்வதேச டெஸ்ட் தொடர் களில் இங்கிலாந்து - அவுஸ்ரேலிய அணிகளுக்கிடையிலான பாரம்பரிய மான ஆஷஸ் தொடரை தவிர்த்துப் பார்த்தால் இந்திய - அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையிலான தொடர் போடர் - கவாஸ்கர் தொடர் எனவும் நியூசிலாந்து - அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையி லான தொடர் சப்பல் - ஹட்லி தொடர் எனவும் இலங்கை - அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையிலான தொடர் முரளிதரன் - வோர்ண் தொடர் எனவும் அழைக்கப்படுகின்றமை வகைமாதிரி உதாரணங்கள் எனலாம். அந்தந்த நாட்டு கிரிக்கெட் ஜாம்பவான்களின் பெயர்களைக் கொண்டு அவர்களைக் கௌரவிக்கும் முகமாக அந்தந்த நாட்டு கிரிக்கெட் சபைகளின் விருப்பத்துக் கிணங்க சர்வதேச கிரிக்கெட் சபையும் அதற்கான அனுமதியை வழங்கி இருந்தது.

விளையாட்டில் வார்த்தையாடல்கள் மற்றும் சர்ச்சைகள் ஏற்படுவது வழக்கம் தான் என்றாலும் அவுஸ்திரேலியாவில் முதன் முறையாக முரளிதரன் பந்துவீசும் பொழுது அவுஸ்திரேலிய நடுவர்களான டரெல் ஹெயரும் றோய் எமர்சனும் முறையற்ற விதத்தில் பந்துவீசுவதாக தெரிவித்ததும் அதனை ஒட்டி நடைபெற்ற சர்ச்சைகளும் வோர்ண் மற்றும் முரளிதரன் ஆகி யோர்களுக்கிடையில் விளையாடும் பொழுது ஏற்பட்ட பனிப்போர்களும் இன்று மறைந்து அவர்களின் பெயர் களிலே இலங்கை - அவுஸ்திரேலிய டெஸ்ட் தொடர் நடைபெறுவதும் வரலாற்றின் முரண்நகை எனலாம். ஆனாலும் விளையாடும் பொழுது ஏற்பட்ட கசப்புணர்வை மறந்து விளையாட்டைக் கட்டியெழுப்பி அதன் ஊடாக விளையாட்டுணர்வை வீரர்கள் மத்தியிலும் ரசிகர்கள் மத்தியிலும் ஏற்படுத்த வேண்டும் என்ற நன்நோக்கிலேயே ஆகும்.

ஒருவகையில் மேற்படி தொடர்களில் பெயர் சூட்டப்பட்டுள்ள வீரர்கள் அனை வருமே அவர்கள் விளையாடிய காலகட் டத்தில் உலக சாதனை படைத்தவர் களாகவே இருக்கின்றார்கள். டெஸ்ட் போட்டிகளில் முதன்முதலாக பத்தாயிரம் ஓட்டங்களைப் பெற்றதோடு அதிக ஓட்டங்கள் குவித்த சாதனையாளராக விளங்கியவர் சுனில் கவாஸ்கர். அவருடைய சாதனையை முறியடித்து அதிக டெஸ்ட் போட்டிகளில் விளையாடி யவர் என்ற சாதனைக்கும் சொந்தக் காரரானார் அலன் போடர். டெஸ்ட் போட்டிகளில் அதிக விக்கெட்டுக்களை வீழ்த்திய வேகப்பந்துவீச்சாளராக உலக சாதனை படைத்தார் நியூசிலாந்தின் றிச்சட் ஹட்லி. அதுபோலவே டெஸ்ட் போட்டிகளில் ஷேன் வோர்ணின் அதிக விக்கெட்டுக்கள் வீழ்த்திய சாதனையை முரளிதரன் முறியடித்ததும் நாம் அறிந்தது தான்.

புறநடையாக உலக சாதனைகள் எதுவும் படைக்காத போதிலும் இலங்கை அணிக்கு டெஸ்ட் அந்தஸ்து கிடைப்பதற்கு முன்னதாகவே 1960 - 1970களில் இலங்கை கிரிக்கெட்டுக்கு ஆக்கபூர்வமான பங்களிப்பை வழங்கி இருந்தவர் என்ற அடிப்படையில் இலங்கை அணியின் முன்னாள் வீரரான மைக்கல் திசேரா அவர்களின் பெயரை ஸ்ரீலங்கா கிரிக்கெட் சென்ற மாதம் நடைபெற்ற மேற்கிந்தியத் தீவுகள் - இலங்கை அணிகளுக்கிடையிலான டெஸ்ட் தொடருக்கு சோபர்ஸ் - திசேரா தொடர் என்று சூட்டி கௌரவித்துள்ளது.

அந்தவகையில் இந்திய - தென்னாபிரிக்க அணிகளுக்கிடையி லான தொடர் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னதாக இத்தொடருக்கு யாருடைய பெயரைச் சூட்டுவார்கள் என்ற எதிர்பார்ப்பு அதிகம் இருக்கவே செய்தது.

இந்தியாவில் பெரும்பாலான காலகட்டங்களில் நட்சத்திர வீரர்கள் இருந்ததைப் போல தென்னாபிரிக்கக் கிரிக்கெட்டின் கடந்த கால வரலாற்றை ஒப்புநோக்குகையில் பல திறமையான சகலதுறையிலும் பிரகாசித்த வீரர்கள் தோன்றி இருந்த பொழுதிலும் அவர்களால் நட்சத்திர அந்தஸ்தை நீண்டகாலமாகப் பெற முடியவில்லை. (தற்போது டீ வில்லியர்ஸ் தோன்றி யுள்ளமை விதிவிலக்கு) இதற்குப் பிரதான காரணம் தென்னாபிரிக்க அரசு கறுப்பினத்தவர்களுக்கெதிராகக் கடைப்பிடித்த இனவெறி காரணமாக 1970ஆம் ஆண்டு தொடக்கம் 1991 ஆம் ஆண்டு வரையான 22ஆண்டுகள் கிரிக்கெட் விளையாடுவதற்கு சர்வதேச கிரிக்கெட் சபை தென்னாபிரிக்க அணிக் குத் தடை விதித்திருந்தமையே ஆகும்.

இதனால் 1970களில் திறமை வாய்ந்த கிரகாம் பொலக், பெரி றிச்சட்ஸ் உட்பட பல தென்னாபிரிக்க வீரர்களின் வாழ்வும் துரதிஸ்டவசமாக முடிவுக்கு வந்திருந்தது. குறிப்பாக தென்னாபிரிக்க அணி 1970களில் அவுஸ்திரேலிய அணியை 4 : 0 என்று **White Wash** செய்த நிலையிலேயே தடை விதிக்கப்பட் டிருந்தமை அவ்வணி எவ்வாறான பலம் பொருந்திய நிலையில் இருந்ததென்பதற்குச் சான்றாகும்.

அந்தப் பின்னணியில் நோக்கும் பொழுது இன்று தென்னாபிரிக்க அணிசார்பாக டெஸ்ட் போட்டிகளில் அதிக ஓட்டங்களைக் குவித்தவர்கள் பட்டியலில் முதல் பதினொரு இடங்களையும் பிடித்திருப்பவர்கள் 1991ஆம் ஆண்டுக்குப் பின்னர் அணியில் இடம் பெற்ற வீரர்களே. அந்தவகையில் தென்னாபிரிக்க அணி சார்பில் இன்று டெஸ்ட் போட்டிகளிலும் ஒருநாள் போட்டிகளிலும் அதிக ஓட்டங்களைப் பெற்ற வீரராக விளங்குபவர் சகலதுறை வீரரான ஜக் கலிஸ். (165 டெஸ்ட் போட்டிகள் : 13,206 ஓட்டங்கள் , 325 ஒருநாள் போட்டிகள் : 11,574 ஓட்டங்கள்). பத்தாயிரம் ஓட்டங்களை இருவகை ஆட்டங்களிலும் கடந்த தென்னாபிரிக்க வீரர் இவர் மட்டும் தான். எனவே வீரர்களைக் கௌரவித்தல் என்ற அடிப்படையில் நோக்கும் பொழுது விரும்பியோ விரும்பாமலோ ஜக் கலிஸின் பெயரையே பரிந்துரைக்க வேண்டிய நிலை வரும்.

அதேநேரம் இந்தியா சார்பில் 'பாரத ரத்னா' விருது பெற்ற சச்சின் டெண்டுல் கரின் பெயர் இதுவரை எந்தவொரு தொடருக்கும் சூட்டப்படவில்லை என்பதால் அவரது பெயரைத் தெரிவு செய்வதில் எந்த விதமான மாற்றுக் கருத்துக்களும் தோன்ற வாய்ப்பிருக் காது. ஏனென்றால் அவரது சமகாலத்த வர்களாகிய முரளிதரன் - ஷேன் வோர்ண் ஆகியோரது பெயர்களிலேயே டெஸ்ட் தொடர் நடைபெற்று வருகின்ற நிலையில் சச்சினது பெயரில் தொடர் நடத்தப்படுவதும் சாத்தியமான தொன்றே.


ஒரு தொடருக்குப் பெயர் வைக்கும் பொழுது குறிப்பிட்ட எதிரணிக்கு எதிராக அதிகம் சாதித்தவர்கள் என்ற காரணத்தில் பெயர் வைக்கப்படுவதில்லை. அந்த வகையில் டெண்டுல்கர் தென்னாபிரிக்கா வுக்கு எதிராக 25 டெஸ்ட் போட்டிகளில் 7 சதங்கள் உட்பட 1,741 ஓட்டங்கள் பெற்றி ருந்த போதிலும் (ஓட்டச் சராசரி 42.46) அவுஸ்திரேலிய அணிக்கெதிராகவே 39 டெஸ்ட் போட்டிகளில் 11 சதங்கள் உள்ளடங்கலாக 3,630 ஓட்டங்களைப் பெற்றிருந்தார் என்பது கண்கூடு (ஓட்டச் சராசரி 55.00).

இந்த இடத்தில் சுனில் கவாஸ்கர் டெஸ்ட் போட்டிகளில் அவுஸ்திரேலிய அணிக்கெதிராக எதிராக 20 டெஸ்ட் போட்டிகளில் 8 சதங்கள் உட்பட 1,550 ஓட்டங்கள் பெற்றிருந்த போதிலும் (ஓட்டச் சராசரி 51.66) மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கெதிராகவே 27 டெஸ்ட் போட்டி களில் 13 சதங்கள் உள்ளடங்கலாக அதிக ஓட்டங்களான 2,749 ஓட்டங்களைப் பெற்றிருந்தார். ஆனாலும் அவுஸ திரேலிய - இந்திய தொடருக்கு அவரது பெயரே சூட்டப்பட்டுள்ளமை ஒட்டுமொத்த மாக அவர் கிரிக்கெட் விளையாட்டுக்கு வழங்கிய பங்களிப்பை மதிக்க வேண்டும் என்பதனால் மட்டுமே.

அந்தவகையில் தென்னாபிரிக்க அணியின் புள்ளிவிபர ரீதியில் தற்போது முன்னிலை வகிப்பவர் ஜக் கலிஸ் என்பதனாலும் சமகாலத்தில் விளையாடியவர்களின் பெயர்களையே

(18 ஆம் பக்கம் பார்க்க)

# சிம்ம சொப்பனம் - 46



"**வா**ருங்கள் காஸ்ட்ரோ. நன்றாக இருக்கிறீர்களா?"
"நலமே!"
இருவரும் சுற்றி வளைத்து எதைப் பற்றியெல்லாமோ பேசினார்கள்.
"க்யூபாவில் நிலைமை மோசமாக இருக்கிறதே!"
"ஆமாம்!" என்றார் பாடிஸ்டா.
"பிரியோவின் ஆட்சியைத் தொடர விடக்கூடாது. அவரைக் கவிழ்த்தே ஆக வேண்டும்!"
"ஆமாம்!" என்றார் பாடிஸ்டா.
இருவரும் பேசிக்கொண்டது இவ்வளவு தான். பண்ணையை விட்டு வெளியேறிய பிறகு காஸ்ட்ரோ தனது நண்பர்களிடம் கூறினார். "பாடிஸ்டா பெரிய அளவில் ஏதோ சதி செய்ய திட்டமிட்டுக் கொண்டிருக்கிறார். சற்றும் தாமதிக்காமல் காஸ்ட்ரோ ஆயத்தங்களைத் தொடங்கி விட்டார். தேர்தல் என்று ஒன்று நடந்தால் பாடிஸ்டாவை ஜனநாயக முறையில் எதிர்க்கலாம். அதற்கான முயற்சிகளை முடுக்கி விடலாம். பொதுமக்களைக் கூட்டி பாடிஸ்டாவின் நிஜ முகத்தை அம்பலப் படுத்தலாம். ஆனால் அதற்கான வாய்ப்பு இப்போது இல்லை. பாடிஸ்டா ஆள்களைச் சேர்க்கத் தொடங்கி விட்டார். அதே வழியில் சென்று பாடிஸ்டாவை எதிர்த்தால் தான் முடியும்.

பாடிஸ்டாவின் சதித்திட்டத்தை புரட்சியால் மட்டும் தான் முறியடிக்க முடியும் என்ற திடமான முடிவுக்கு அவர் வந்து சேர்ந்திருந்தார். ஆனால் கையில் காசு கிடையாது. ஆயுதங்கள் கிடையாது. பெரிய அளவில் ஆதரவு எதுவும் கிடையாது. காஸ்ட்ரோவிடம் இருந்தது ஒரு கனவும் அதைச் செயல்படுத்தத் தேவையான துணிச்சலும் தான். கண்களை மூடித் திறப்பது போல் மிக இயல்பாக அது நடந்து விட்டது. 1952ஆம் ஆண்டு பாடிஸ்டா ஆட்சியைக் கைப்பறிக் கொண்டார். ஒரு துளி இரத்தமும் சிந்தப் படவில்லை. ஒரு குண்டு கூட வெடிக்கவில்லை. காரில் ஏறினார். இராணுவத் தலைமையகத்தை வந்தடைந்தார். தனக்குக் கொடுக்கப்பட்ட அரச வரவேற்பை ஏற்றுக் கொண்டார். நாடாளுமன்றம் கலைக்கப்பட்டது. சிறைச்சாலை நிரம்பி வழிந்தது. க்யூபாவை விட்டு வெளியேற முயன்ற பிரியோ கைது செய்யப்பட்டார் . " ஆட்சி மாறிவிட்டது. இனி நான் க்யூபா !" என்று ஓர் அறிக்கையை வெளியிட்டார் , அவ்வளவு தான்!

குழப்பத்திலிருந்த க்யூபர்களை சாந்தப்படுத்தினார் பாடிஸ்டா. " கவலைப்படாதீர்கள். இது ஒரு தற்காலிக மாற்றம் தான். விரைவில் தேர்தல் நடைபெறும். ஜனநாயக முறைப்படி ஆள்கள் போட்டியிடுவார்கள். பெரும்பான்மை பெற்று வெல்பவர்களே பதவியில் அமர முடியும்" என்றார். ஆர்தோடாக்ஸ் கட்சி உள்ளிட்ட பலர் பாடிஸ்டாவை ஏற்றுக் கொண்டனர். தேர்தல் நடைபெறும் என்ற உறுதிமொழி அவர்களைச் சமாதானப்படுத்தியது. டொமினிக்கள் குடியரசின் தலைவர் டிரோஜிலோ. பாடிஸ்டா அரசை முதல் முறையாக அங்கீகரித்தார். இலத்தீன் அமெரிக்க நாடுகளும் பாடிஸ்டாவை ஏற்றுக் கொண்டன.

அமெரிக்காவுக்குக் கொண்டாட்டமாகிப் போனது. ஆர்தோடக்ஸ், கம்யூனிஸ்டுகள் போன்ற தொல்லைகள் நீங்கின என்று பெருமூச்சு விட்டது. தன்னுடைய எதிர்பார்ப்புகளைப் பூர்த்தி செய்து பாடிஸ்டா நல்ல முறையில் ஆட்சி நடத்துவார் என்று அதற்குத் தெரியும். க்யூபாவில் இளம்தாடியோடு காஸ்ட்ரோ எனும் முரட்டு வழக்கறிஞர் செயல்படுவதை அமெரிக்கா அறிந்திருக்கவில்லை. பாடிஸ்டாவும் காஸ்ட்ரோவை ஒரு பொருட்டாக எடுத்துக் கொண்டதாகத் தெரியவில்லை.

## சொற்சிலம்பம் போட்டி இல. 697

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | | | 5 | 6 |
| 7 | | | | | 8 | | |
| 9 | | | 10 | 11 | | | |
| | | 12 | | | | 13 | |
| 14 | 15 | | | 16 | 17 | | |
| | 18 | | | | 19 | | |
| 20 | | | | 21 | | 22 | 23 |
| 24 | | | 25 | | | | |

### மேலிருந்து கீழ்

1.தேனிசைப்பா தரும் புலவன்.
2.இந்தியத் தந்தை.
3.போதை தருவது.
4.வள்ளுவன் சகோதரன்.
5.கூட்டல் குறியீடு.
6.திவ்விய சித்தம் - என்று சீட்டுப் போட்டுப் பார்ப்பதை இப்படிக் கூறுவர்.
8.நல்ல.
11.பெண்.
12.மடல்.
13.பக்கத்து வீட்டுக்காரன்.
15.நல்லை நகர் தந்த மாணிக்கம்.
17.முனிவன்..
20.உடனிருப்பவன்.
21.ஒரு வள்ளல்.
23.ஒரு தானிய வகை.

### இடமிருந்து வலம்

1. இந்துக்களின் புனித தினம்.
5.தீய திட்டம் தீட்டுவது.
7. ஒரு வகைப் பேரிகை.
8.வீலகு.
9.மன்மதன் மனம் கவர்ந்த அழகி.
10.சீதை புத்திரன்.
12.திருமணமாகாத பெண்.
13.ஒன்றை அளவெடுக்கும்படி உத்தரவிடல்.
14.சிறிய நேர அளவீடு.
16.துணிச்சல்.
18.அழித்தல்.
19.பலவல்ல.
20.மனிதக் கழிவுகளில் ஒன்று.
22.வாழ்.
24.கருமேகம்.
25.அம்மாவின் மூத்த சகோதரி.

அனுப்புபவர் பெயர்:.............................................
விலாசம்:.............................................
.............................................
கையொப்பம்:.............................................

### சொற்சிலம்பம் போட்டி இல. 697

சொற்சிலம்பம் போட்டி 697ற்கான விடைகளை அனுப்பி வைக்கவேண்டிய இறுதித் தினம் 2015 ஆம் ஆண்டு நவம்பர் 18 ஆம் திகதி ஆகும். விடைகள் மற்றும் வெற்றி பெற்றவர்களின் பெயர்கள் முறையே நவம்பர் 25ஆம் மற்றும் டிசம்பர் 02 ஆம் திகதிய சுடர் ஒளியில் பிரசுரமாகும். தபாலட்டையில் ஒட்டப்பட்டு அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மட்டும் ஏற்றுக் கொள்ளப்படும். முதலாவது பரிசாக ரூபா 250 உம் இரண்டாவது பரிசாக ரூபா 150 உம் மூன்றாவது பரிசாக ரூபா 100 உம் வழங்கப்படும். பலர் விடைகளைச் சரியாக எழுதியிருப்பின் அதிஷ்டக் குலுக்கல் மூலம் பரிசுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

அனுப்ப் வேண்டிய முகவரி:

**சுடர் ஒளி யாழ். அலுவலகம்,**
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## போட்டி இல. 694இல் பரிசு பெற்றோர்

| | |
|---|---|
| 1 ஆம் பரிசு | ம.விஸ்ரஜினா, இல. 26/3, ஆசீர்வாதப்பர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். |
| 2 ஆம் பரிசு | திருமதி செ.பூமணி, இல. 15/06 புவனேஸ்வரி அம்பாள் வீதி, நல்லூர் கிழக்கு, யாழ்ப்பாணம். |
| 3 ஆம் பரிசு | திருமதி.வத்சலா துரைசிங்கம், ஆழ்வான் கிணற்றடி, பன்னாலை, தெல்லிப்பளை. |

### சொற்சிலம்பம் போட்டி இல. 695க்கான விடைகள்

**மேலிருந்து கீழ்**


1.ஆபத்பாந்தவன்.
2. சீனி.
3.வாகடம்.
4. தடம்.
5. பல.
8. உதரம்.
9.புகழ்.
10.பெரியண்ணன்.
13.பாரி.
15.ரதி.
16.பிறன்.
17.எண்ண.
19.உண்.

**இடமிருந்து வலம்**

1.ஆசீர்வாதப்பர்.
6.பனி.
7.கட.
8.உடம்பு.
11.பாரதம்.
12.கவரி.
13.பாழ்.
14.தரம்பிரி.
17.எண்.
18.வதி.
19.உண்ண.
20.சின்னண்ணன்.

# கூட்டணிக்கு இந்தக் கதியா?

- ஆதங்கன்






இரு காந்தங்களின் ஒத்த முனைகள் ஒன்றையொன்று எதிர்த்து தள்ளுவதென்பது விஞ்ஞான விதி. ஆனால் இந்த ஒத்த தன்மையான முனைகள் ஒன்றுசேராமல் இருப்பது காந்தத்துக்கு மட்டுமே பொருந்தும். ஏனைய விடயங்களிலெல்லாம் ஒத்த தன்மையுடையவையே உடனடியாக ஒட்டிக் கொள்ளும் தன்மையினைக் கொண்டவை. அதனால் தான் 'இனம் இனத்தோடுதான் சேரும்' என்று கிண்டலாகச் சொல்வார்கள்.

இலங்கை அரசியலில் கடந்த வாரம்வரை எதிர் நிலை அரசியல் தன்மையோடு பயணித்துக் கொண்டிருந்த இருவர் திடீரென ஒரே கட்சிக்குள் ஐக்கியமாகி, ஒரு தாய் மக்களாக கூடிக் குலவுகின்ற காட்சி பலரையும் புருவத்தை உயர்த்த வைத்துள்ளது. விடுதலைப்புலிகளின் முன்னாள் கிழக்கு மாகாணத் தளபதியாக இருந்த கருணாவும், தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் ஆனந்த சங்கரியும் தான் அந்த இருவரும்.

வெளிப்பார்வைக்கு இந்த இருவரும் எதிர்க் கொள்கையினைக் கொண்டிருந்தாலும் உண்மையில் இவர்கள் இருவருக்குமிடையே பல ஒற்றுமைகளும் இருக்கின்றன. கருணா புலிகள் அமைப்பில் இருந்த போது புகழ் பூத்த தளபதி. ஆனால் புலிகளில் இருந்து பிரிந்த போது, அவரது மரியாதையும், புகழும் காற்றோடு போயின. என்றாலும் மஹிந்த தன் செல்லப்பிள்ளையாக கருணாவை தேசியப்பட்டியல் எம்.பியாக்கியதோடு, சுதந்திரக் கட்சியின் பிரதித்தலைவர் பதவியையும் கருணவுக்கு வழங்கி அழகு பார்த்தார். ஆனால் மஹிந்தவின் வீழ்ச்சியோடு எல்லாம் தலைகீழாகி விட இப்போது அரசியல் அநாதையாகிவிட்டார் கருணா.

ஆனந்த சங்கரியும் இலேசுப்பட்டவர் அல்லர். தமிழர் விடுதலைக் கூட்டணியின் தூணாக இருந்தவர். தமிழர்களின் அரசியல் தலைவிதியைத் தீர்மானிக்கும் சக்தியை ஒருகாலத்தில் கொண்டிருந்தவர். அதனால் தான் தமிழ் மக்களின் தொன்மையான அரசியல் சக்தியான தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவராக முடிந்தது.

சிங்களக் கட்சிகள் எப்படி சிறுபானமியினருக்கு எதிராக ஒன்று திரண்டு அடக்குமுறையில் ஈடுபடுகின்றனவோ, அதே ஒற்றுமையோடு இணைந்து பேரின அடக்குமுறையில் இருந்து அரசியல் ரீதியாக எழுச்சி பெறும் நோக்கில் உருவாக்கப் பட்டதே தமிழர் விடுதலைக் கூட்டணி.

1972 ஆம் ஆண்டில் இலங்கையின் முக்கிய தமிழ்க் கட்சிகளான தமிழரசுக் கட்சி, தமிழ்க் காங்கிரஸ், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் என்பவை சேர்ந்து தமிழர் கூட்டணி என்னும் கூட்டமைப்பை உருவாக்கின. மேற்படி கட்சிகளின் தலைவர்களாக இருந்த எஸ். ஜே. வி. செல்வநாயகம், ஜீ. ஜீ. பொன்னம்பலம், சௌ. தொண்டமான் ஆகியோர் கூட்டுத் தலைவர்களாக நியமிக்கப்பட்டனர்.

1976 இல் இவ்வமைப்பு தமிழர் விடுதலைக் கூட்டணி எனப் பெயர் மாற்றம் பெற்றதுடன், வட்டுக்கோட்டையில் நடந்த அதன் மாநாட்டில், வட்டுக்கோட்டைத் தீர்மானம் என்று பரவலாக அறியப்படும் தீர்மானத்தையும் நிறைவேற்றியது.

இத் தீர்மானம் இலங்கையில் தமிழ்த் தேசத்தின் இருப்பைப் பாதுகாத்துக் கொள்வதற்காக, சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில், சுதந்திர, இறைமையுள்ள, மதச் சார்பற்ற, சோசலிசத் தமிழீழ நாட்டை மீள்விக்க வேண்டுமெனப் பிரகடனம் செய்தது.

1977 ஆம் ஆண்டில் நடைபெற்ற பொதுத் தேர்தலில், சுதந்திரத் தமிழீழக் கொள்கைக்கு மக்கள் ஆணை கோரிப் போட்டியிட்ட தமிழர் விடுதலைக் கூட்டணி, பெரும் வெற்றி பெற்று, இலங்கைப் நாடாளுமன்றத்தில் பிரதான எதிர்க் கட்சியாக அமரும் வாய்ப்பைப் பெற்றது. கூட்டணித் தலைவர் அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம் எதிர்க்கட்சித் தலைவரானார். ஆனால் அதன் பின்னர் மக்கள் மத்தியில் மிதவாத அரசியல் சிந்தனையை விடவும், ஆயுதப் போராட்டம் மூலமான விடுதலையே சாத்தியம் என்ற எண்ணம் உருவாக, கூட்டணி செல்வாக்கிழக்கத் தொடங்கியது.

படிப்படியாக அதன் தலைமைப் பொறுப்பு ஆனந்த சங்கரியிடம் வந்தது. அதன் பின்னர் ஒரு நிலையில்லாக் கொள்கையாளராக ஆனந்த சங்கரி விளங்கினார். ஒருகட்டத்தில் விடுதலைப் புலிகளைத் தூற்றிய ஆனந்த சங்கரி, பின்னர்தமிழ்த் தேசியக் கூட்டமைப்போடு இணைந்து போட்டியிட்ட நாடாளுமன்றத் தேர்தலில் அதே விடுதலைப் புலிகளை போற்றிப் புகழ்ந்துரைத்தார். பின்னர் கூட்டமைப்பில் இருந்து வெளியேறினார். பின்னர் கூட்டமைப்பைக் குறை கூறினார். அதன் பிறகு மீண்டும் கூட்டமைப்போடு ஒட்டிக் கொண்டார். அதன் பின்னர் மீளவும் பிரிவு. இப்படி இணைவதும் பிரிவதுமாக இருந்த ஆனந்த சங்கரி, இந்த வருடம் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் கொழும்பில் தனித்துப் போட்டியிட்டு மூக்குடைபட்டார். இப்போது அவரும் ஓர் அரசியல் அநாதை.

இப்படி யாருமே தத்தெடுக்க முன்வராத அரசியல் அநாதைகளான கருணாவும், ஆனந்த சங்கரியும் கடந்தவாரம் வரை ஒருவரை ஒருவர் திட்டித் தீர்த்தவர்கள்..

அப்படி, கீரியும் - பாம்புமாக இருந்தவர்களை சந்தர்ப்ப சூழல் ஒரே கட்சிக்குள் சங்கமிக்கச் செய்துவிட்டது. இதுநாள் வரை சுதந்திரக் கட்சியின் உப தலைவராகவும், உறுப்பினராகவும் இருந்த கருணா என்கிற விநாயகமூர்த்தி முரளிதரன், அங்கிருந்து வெளியேறி ஆனந்தசங்கரியின் பாதார விந்தங்களை வந்தடைந்துள்ளார். கட்சி விட்டு கட்சி தாவுவதென்பது கருணாவுக்கு கை வந்த கலையாயிற்றே. இத்தனை நாளும் இல்லாமல் இப்போது ஏன் கருணா கீட்சி மாற

(18 ஆம் பக்கம் பார்க்க)




# மணிகண்டனின் குற்றமே தண்டனை

மணிகண்டனின் 'காக்கா முட்டை' தமிழ் சினிமாவுக்கு முக்கியமான திரைப்பட வழக்கமான வியாபார நோக்கத்தை இந்தப் படம் உடைத்தது. அவரது இரண்டாவது படம், குற்றமே தண்டனையும் அதேபோன்றே உருவாகியுள்ளது.

முதலாவதாக, இந்தப்படம் இரண்டரை மணிநேரங்கள் எல்லாம் ஓடப் போவதில்லை. மொத்தப் படமே 98 நிமிடங்கள்தான். படத்தில் பாடல்கள் இல்லை என்பது இன்னொரு முக்கியமான அம்சம். இளையராஜா படத்தின் பின்னணி இசையை அமைத்திருக்கிறார்.

ஒரு கொலையையும் அதனையொட்டி நடக்கும் சம்பவங்களையும் வைத்து இந்தப் படம் தயாராகியுள்ளது. விதார்த் படத்தை தயாரித்து முக்கியமான வேடத்தில் நடித்துள்ளார்.

அவருடன் நாசர், ரகுமான், ஐஸ்வர்யா ராஜேஷ் ஆகியோரும் நடித்துள்ளனர். மணிகண்டனே படத்தின் ஒளிப்பதிவையும் செய்துள்ளார். விரைவில் வெளிவரவிருக்கும் இந்தப் படம் மும்பை மற்றும் கேரளா சர்வதேச திரைப்பட விழாக்களில் திரையிட தேர்வு செய்யப்பட்டுள்ளது.



# ஐஸ்வர்யா இயக்கத்தில் விஜய் சேதுபதி!

நானும் ரவுடிதான் படத்திற்கு ரசிகர்கள் கொடுத்து வரும் ஆதரவால், அதிக சந்தோசத்தில் இருக்கிறார் தனுஷ். அப்படியே தனக்கும் சிவகார்த்திகேயனுக்கும் இடையே இருக்கும் மயிரிழையளவு எரிச்சலை இன்னும் அதிகப்படுத்துகிற திட்டமாக அவரது நேரடி போட்டியாளரான விஜய் சேதுபதியை உயர்த்திவிட முடிவு செய்துவிட்டார். அதன் தொடர்ச்சிதான், விஜய் சேதுபதியும் தனுஷும் மீண்டும் இணைகிற திட்டம். அவரது 'வொண்டர்பார்' நிறுவனத்திற்கே மீண்டும் நேரம் ஒதுக்கியிருக்கிறார் விஜய் சேதுபதி.

யாருடைய மேற்பார்வையும் இல்லாமல் 'வை ராஜா வை' என்ற படத்தை இயக்கிக் காட்டி, தனது திறமையை நிரூபித்தவர் ஐஸ்வர்யா. அந்த நம்பிக்கையில்தான் விஜய் சேதுபதியும் அவரது இயக்கத்தில் நடிக்க சம்மதித்திருக்கிறார்.

இந்த புதிய படத்தில் ஹன்சிகாதான் நாயகியாம்.



# தனுஷுக்குப் புது ஜோடி

துரைசெந்தில்குமார் இயக்கத்தில் தனுஷ் இரட்டைவேடங்களில் நடிக்கவிருக்கும் படத்தின் படப்பிடிப்பு நவம்பர் முதல்வாரம் அல்லது தீபாவளி கழித்துத் தொடங்கவிருப்பதாகச் சொல்லப்படுகிறது.

அந்தப்படத்தில் தனுஷின் ஜோடியாக நடிக்க முதலில் லட்சுமிமேனனிடம் பேசியதாகவும் அதன்பின் நித்யா மேனனை ஒப்பந்தம் செய்ததாகவும் சொல்லப்பட்டது. இப்போது அதிலும் மாற்றம் ஏற்பட்டிருக்கிறது.

தனுஷின் ஜோடியாக நடிக்க த்ரிஷாவை ஒப்பந்தம் செய்திருக்கிறார்களாம். அந்தக்கதாபாத்திரத்துக்கு த்ரிஷாதான் பொருத்தமாக இருப்பார் என்பதால் அவரை நடிக்கவைக்க விருப்பதாகச் சொல்கிறார்கள். அதோடு தனுஷும் த்ரிஷாவும் இதுவரை ஜோடியாக நடித்ததில்லை.



## ...ன்
## ...டனை

...முக்கியமான திரைப்படம்.
...ந்து. அவரது
...ற உருவாகியுள்ளது.
... எல்லாம் ஓடப்
...தில் பாடல்கள் இல்லை
...படத்தின் பின்னணி

...களையும் வைத்து
...து முக்கியமான

...யாரும் நடித்துள்ளனர்.
...விரைவில்
...சர்வதேச திரைப்பட





# மீண்டும் ராணியாக அனுஷ்கா

'பாகுபலி' படத்தில் அனுஷ்கா ராணி வேடத்தில் வந்து ரசிகர்கள் மத்தியில் ராணிபோல வலம் வர தொடங்கினார்.

இதையடுத்து 'ருத்ரமாதேவி' படத்திலும் சரித்திர கால ராணியாக நடித்தார். அவரைச் சுற்றியே கதை வரும் இந்த படமும் வெற்றிகரமாக ஓடிக்கொண்டிருக்கிறது.

வரலாற்றுப் பின்னணியில் உருவான இந்த கதைகளுக்காகவே அனுஷ்கா பல்வேறு பயிற்சிகளை பெற்றார். கடினமாக உழைத்தார். அதற்கு நல்ல பலனும் கிடைத்தது. அடுத்து மீண்டும் அனுஷ்கா ராணியாக நடிக்க இருக்கிறார். சரித்திர பின்னணி கொண்ட 'பகமதி' ராணியாக இவரை வைத்து படம் எடுக்க தெலுங்கு இளம் இயக்குனர் ஜி.அசோக் முன் வந்திருக்கிறார்.

இதற்கான கதையை அனுஷ்காவிடம் அவர் சொல்லி நடிக்கும்படி கேட்டுக்கொண்டார். கதையும் அதில் வரும் ராணி பாத்திரமும் பிடித்துவிட்டதால் அனுஷ்கா நடிக்க ஒப்புக்கொண்டுள்ளார். இப்போது 'பாகுபலி-2'-ல் நடிக்க இருப்பதால் உடனே இந்த படப்பிடிப்பு நடைபெற வாய்ப்பு இல்லை. 'பாகுபலி' படப்பிடிப்பு முடிந்த பிறகு மற்றொரு ராணியாக நடிக்க அனுஷ்கா தயார் ஆகிறார்.

# வருகிறது மத கஜ ராஜா

சுந்தர் சி. இயக்கத்தில் விஷால் நடித்த 'மத கஜ ராஜா' படத்தை மீண்டும் தூசி தட்டி வெளியிடும் முயற்சியில் இறங்கியுள்ளனர்.

நடிப்பைத் துறந்து, முழுநேர இயக்குநர் பணியில் இறங்கிய சுந்தர் சி.யின் முதல் படமாக வெளிவந்தது கலகலப்பு. படம் மாபெரும் வெற்றி. அதைத் தொடர்ந்து விஷால், வரலட்சுமி, அஞ்சலி நடிப்பில் 'மத கஜ ராஜா' படத்தை இயக்கினார்.

படம் முடிந்து பல வருடங்கள் ஆகியும் வெளியாகவில்லை. தயாரிப்பாளரின் கடன் பிரச்சனையால் படம் வெளியாவது இன்னும் சாத்தியமாகவில்லை. நடுவில், விஷால் தனது சொந்தப் பணத்தில் படத்தை வெளியிட முயற்சி செய்தும் நடக்கவில்லை.

இந்த நிலையில், 'மதன் கஜ ராஜா'வின் தயாரிப்பாளர்கள் கடனை செட்டில் செய்து 'மத கஜ ராஜா'வை வெளியிடும் முயற்சியில் இறங்கியுள்ளனர்.

தீபாவளிக்குப் பிறகு படம் வெளிவர வாய்ப்புள்ளது.

# விஜய்யின் அடுத்த நாயகன் ஜெயம்ரவி?

விஜய் இயக்கத்தில் விக்ரம்பிரபு நடித்த 'இது என்னமாயம்' படம் கடந்த ஜூலைமாதம் வெளியானது. அதற்கடுத்து விஜய் என்ன செய்யப்போகிறார்? என்பது பற்றி எந்தத்தகவலும் இல்லை.

ஆனால் அவர் அடுத்தப் படத்துக்கான கதையை எழுதிவிட்டாராம். விரைவில் படப்பிடிப்புக்குப் போகிற அளவு அவர் தயாராகிவிட்டார் என்று சொல்லப்படுகிறது.

லெமூரியா என்றோ அல்லது குமரிக்கண்டம் என்றோ பெயர் வைத்து, ஒரு கதையைத் தயார் செய்திருப்பதாகச் சொல்லப்படுகிறது. அந்தக்கதையை ஜெயம்ரவிக்குச் சொல்லியிருக்கிறார். அவருக்குக் கதை பிடித்துவிட்டதாம். எனவே அந்தப்படத்தில் நடிக்க ஒப்புக்கொண்டுவிட்டதாகச் சொல்லப்படுகிறது.

கதை மற்றும் கதாநாயகன் முடிவாகிவிட்ட மகிழ்ச்சியில் இயக்குநர் விஜய் அடுத்தடுத்த வேலைகளில் இறங்கிவிட்டாராம். விரைவில் அந்தப்படம் குறித்த அறிவிப்பு வரலாம் என்று சொல்லப்படுகிறது.





# ஜோதிகாவை விஞ்சிய நயன்தாரா

தன் மகன் விஜய் சேதுபதியை போலிஸ் ஆக்கிவிட வேண்டும் என்று ஆசைப்படுகிறார் போலிஸ் அம்மா ராதிகா. அவரோ, போலிஸை விட ரவுடி 'இமேஜ்தான்' பெரிசு என்கிற எண்ணத்திலேயே வளர்கிறார்.

தன்னுடைய போலிஸில் வேலை பார்க்கும் அப்பாவை அவமானப்படுத்தி, தன் அம்மாவை கொன்று, தன் காதை செவிடாக்கிய ரவுடியை போட்டுத் தள்ளுவதே இலட்சியம் எனத் திரிகிறார் நயன்தாரா. இவரும் விஜய் சேதுபதியும் சந்திக்கிற நேரத்தில் சேதுபதி மனசில் காதல் வருகிறது. 'உனக்கு நான் வேணும்னா அவனை போட்டுத்தள்ளு' என்று நயன் காட்டுகிற ரவுடி யார் தெரியுமா? பார்த்திபன். நினைத்தது நடந்ததா? பரபர முடிவு. நகைச்சுவையுடன் விசேஷமான திரைக்கதையால் அசரடிக்கிறார் விக்னேஷ்சிவன்.

'மொழி' ஜோதிகாவுக்கு இணையான ஒரு நடிகை இருந்தா காட்டுங்களேன் என்று இனி யாரும் சவால் விட முடியாது. நயன்தாரா வந்துவிட்டார் அந்த இடத்துக்கு.




அந்த காது கேளாதவர் பாத்திரத்தை அவ்வளவு அழகாக வெளிப்படுத்தியிருக்கிறார்.

முதல் காட்சியில் துவங்கி கடைசி காட்சி வரைக்கும், இம்மியளவும் பிசகாமல் செவிட்டு மொழி தொற்றிக் கொள்கிறது அவரை! லேசாக கழுத்தை நீட்டி நீட்டி பேசும் அந்த நுணுக்கமும், கண்களில் படிந்திருக்கும் சோகமும், வெடித்துச் சிதறும் அழுகையும், அவ்வளவு பெரிய பார்த்திபனிடம் கத்தி நீட்டும் துணிச்சலுமாக வாவ், ஒரு பார்பி பெண்ணை, இராணுவ வீராங்கனையாகவும் மாற்றி அழகு கூட்டுகிறார் விக்னேஷ்சிவன்.

தெரிந்தோ தெரியாமலோ இயக்குநர் இழுத்த இழுப்புக்கெல் லாம் வளைந்து கொடுத்திருக் கிறார் நயன்தாரா.

இல்லாத தைரியத்தை இருப்பதாகக் காட்டும் விஜய் சேதுபதியின் 'நானும் ரவுடிதான்' கதாபாத்திரம். நினைத்து நினைத்து ரசிக்கிற ரகம். ஒரே நேரத்தில் அம்மாவையும் காதலியையும் சமாளிக்கிற விதத்தை விடுங்கள். அப்பா இறந்த விஷயத்தையே நயன்தாராவிடம் மறைத்துவிட்டு அவரை சிரிக்க வைக்கிற காட்சியில், ஆனந்தத் துளியும் அழுகைத் துளியுமாய் எட்டிப் பார்க்கிறது கண்ணீர்.

ஒரு நல்ல ரவுடி வேண்டும் என்று தன்னிடமே கேட்கும் நயன்தாராவிடம், நான்தான் அவன் என்று சொல்லிப் புரிய வைக்க விஜய் சேதுபதி பிரயத்தனப் படுகின்றபோது தியேட்டர் சிரிப்பொலியால் அதிர்கின்றது. இப்படி படம் நிறைய வெடிகளை பற்ற வைத்துக் கொண்டேயிருக்கிறது விஜய் சேதுபதியின் அப்பாவி முகம்.

தன் அகலமான தோளில்சுலபமாக தாங்குகிறார் பார்த்திபன். எல்லாம் அந்த கொடூர வில்லன் இமேஜைதான். ஆனால் அவ்வளவு கொடூரமானவரையும் வெறுப்பில்லாமல் ரசிக்க வைக்கிறது அவரது நடிப்பும், அவரே உருவாக்கிக் கொண்ட சில வசனங்களும். (பார்வதி பூஜையில ஏண்டா கரடிய நுழைக்கிறீங்க? ஒரு சாம்பிள்) பிள்ளை பாசம் பொங்க பொங்க இன்ஸ்பெக்டர் ராதிகா. விஜய்சேதுபதி மேல் அவர் வைத்திருக்கும் அபார நம்பிக்கையும், போட்டுக் கொடுக்கும் போலிஸிடம் பொறுக்க மாட்டாமல் குமுறுவதுமாக 'என் புள்ள கொத்தமல்லி கொழுந்துடி' என்கிற அவரது கொஞ்சலை இன்னொரு முறையும் ரசிக்கலாம்.



பார்த்திபன் மட்டுமல்ல, நகைச்சுவை இமேஜை வாழ்நாள் சாதனையாக்கிக் கொண்ட ஆனந்தராஜ், மன்சூரலிகான்களை கூட ரசிக்க முடிகிறது. அதுக்காகவே பாராட்டுக்கள் விக்னேஷ்.




ஆர்யாவுக்கும் சந்தானத்திற்குமான ஒற்றுமையைப் போலவே அமைந்திருக்கிறது விஜய் சேதுபதியினதும் ஆர்ஜே பாலாஜியினதும் நடிப்பு. இருவரும் சேர்ந்து ரவுடித் தொழில் வேறு செய்கிறார்கள். நடக்கிற சம்பவங்கள் எல்லாம் சின்னப்பிள்ளைகளின் ரகம். சந்தானம் போலவே நிகழ்கால அவஸ்தைகளை வசனங்களில் சேர்த்து கலகலப்பூட்டுகிறார் பாலாஜி.

இந்த படத்தின் ஆகப்பெரிய அட்டகாசமாக அமைந்திருக்கிறது அனிருத்தின் இசை. வெறும் உருட்டல்கள் மட்டுமல்ல, அற்புதமான மெலடிகளும் தன்னால் முடியும் என்கிறது அவரது ட்யூன்கள். குறிப்பாக 'தங்கமே' பாடல். ஜோர்ஜ் சி வில்லியம்ஸ் மாதிரி ஒளிப்பதிவாளர்கள் அமைந்தால், இன்னும் பத்து வருஷம் கழிந்த பின்பும் கூட, நயன்தாராவை அடித்துக் கொள்ள அழகிகள் வரப்போவதில்லை.

முதல் படமான 'போடா போடியில்' தடுக்கி விழுந்தாலும், ரவுடி மடியில் விழுந்து பிழைத்துவிட்டார் விக்னேஷ் சிவன்! இந்த காதல் ரவுடிக்கு பாராட்டுக்கள்!

- ஆசாத்




கம்பஹா மாவட்டத்தில் இடம்பெற்ற சிறுமி சேயாவின் பாலியல் வன்புணர்வுக் கொலை தொடர்பாக கைது செய்யப்பட்டுப் பின் விடுவிக்கப்பட்ட கொண்டயா என அழைக்கப்படும் துனேஷ் பிரசாந்த தனக்கு அநீதி இழைக்கப்பட்டதாக பொலிஸ் சுயாதீன ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளான்.

புங்குடுதீவு பாடசாலை மாணவியின் பாலியல் வன்புணர்வுக்கொலைக்குப் பின்பு சிறுமி சேயாவின் கொலை பெரும் அதிர்ச்சியையும் பரபரப்பையும் ஏற்படுத்தியதுடன், நாடு பரந்த ஆர்ப்பாட்டங்களையும் உருவாக்கியிருந்தது.

தனது வீட்டில் தூங்கிக் கொண்டிருந்த சிறுமி சேயா காணாமற்போயிருந்தாள். பின்பு அவளின் சடலம் ஒரு ஒதுக்குப்புறமான இடத்தில் கண்டு பிடிக்கப்பட்டது. இது தொடர்பாக ஒரு பாடசாலை மாணவனும், குடும்பஸ்தர் ஒருவரும் கைது செய்யப்பட்டனர். மரபணுப் பரிசோதனையின் பின்பு அவர்கள் குற்றமற்றவர்களென விடுவிக்கப்பட்டனர். அவர்கள் தாங்கள் பொலிஸாரால் தாக்கப்பட்டதாகவும், சித்திரவதைகளுக்கு உட்படுத்தப்பட்டதாகவும் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்தனர். அது தொடர்பான விசாரணைகள் இடம் பெற்று வருகின்றன. அடுத்து வேறு சில குற்றங்களுக்காகத் தேடப்பட்டு வந்த நபரான கொண்டையா கைது செய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டான். அவன் தானே அந்தக் கொலையைச் செய்ததாகவும் ஒப்புக்கொண்டதாகத் தகவல்கள் வந்த நிலையில் கொண்டையாவின் சகோதரன் தானே அந்தக் கொலையை மேற்கொண்டதாகக் கூறிப் பொலிஸில் சரணடைந்தான்.

அதேவேளை, மரபணுப் பரிசோதனை நடத்தப்பட்டதை அடுத்துக் கொண்டயா விடுதலை செய்யப்பட்டான்.

அதையடுத்துக் கொண்டயா சாக்கு ஒன்றினால் தனது தலையை மூடிவிட்டு சுவரில் மோதியது உட்படப் பலவிதமான சித்திரவதைகள் மூலம் தன்னிடம் ஒப்புதல் வாக்கு மூலம் பெறப்பட்டதாகச் சுயாதீன ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளான்.

கொண்டயா, ஒரு குடும்பஸ்தர், ஒரு மாணவன் ஆகியோர் சிறுமியின் கொலை தொடர்பாக சித்திரவதைகள் செய்யப்பட்டு ஒப்புதல் வாக்கு மூலம் பெறப்பட்டது என்பது தெரியவந்துள்ளது. மரபணுப் பரிசோதனை மேற்கொள்ளப் படும் வசதி இல்லாமலிருந்தால் அப்பாவிகள் தண்டிக்கப்படும் அவலம் நிகழ்ந்திருக்கக் கூடும். மரபணுப் பரிசோதனை முறை அண்மையில்தான் இலங்கையில் நடைமுறைக்கு வந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

இதேபோன்று கடந்த வருடம் கிளிநொச்சி உருத்திரபுரத்தில் ஒரு சிறுமி காணாமற் போயிருந்தாள். அது தொடர்பாக ஒரு 14 வயது பாடசாலை மாணவன் கைதுசெய்யப்பட்டான். பல நாள்கள் தேடியும், சிறுமியோ, சிறுமியின் சடலமோ கண்டுபிடிக்கப்படவில்லை. நீண்ட நாள்களின் பின்பு சிறுமி அணிந்திருந்த ஆடைகளும், சில எலும்புப் பகுதிகளும் கண்டுபிடிக்கப்பட்டன. ஏற்கனவே அந்த இடம் தேடப்பட்ட இடம் என்பது குறிப்பிடத்தக்கது. அதாவது அந்தப் பாகங்கள் பிறகு கொண்டு வந்து போடப்பட்டிருக்கலாம் என்று கருதப்படுகிறது.

ஆனால் பாடசாலை மாணவன் தானே அச்சிறுமியைப் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்திக் கொலை செய்ததாக ஒப்புதல் வாக்குமூலம் அளித்ததாக நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது. அவன் இப்போது சிறுவர் சீர் திருத்தப் பள்ளியில் தடுத்துவைக்கப்பட்டுள்ளான்.

ஒரு 14 வயது மாணவன் சிறுமியை பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்திவிட்டுக் கொலை செய்யத் துணிவானா என்ற கேள்வி மக்கள் மத்தியில் எழுந்துள்ளது.

அதேவேளையில் சிறுவன் தான் கடுமையான முறையில் சித்திரவதை செய்யப்பட்டதாகப் பெற்றோரிடம் சொல்லி அழுதுள்ளான். சிறுமியின் பெற்றோரும் அந்த மாணவன் இக் குற்றத்தை மேற்கொண்டிருக்க முடியாது எனவும் அவன் அவளின் ஒன்றுவிட்ட சகோதரன் எனவும் தெரிவித்துள்ளனர்.

எப்படியும் கொண்டயாவுக்கு இடம்பெற்றது போலவே இந்த மாணவனிடம் சித்திரவதை மூலம் ஒப்புதல் வாக்கு மூலம் பெறப்பட்டுள்ளதாகக் கருதப்படுகிறது. இங்கு சிறுமியின் சடலம் கண்டுபிடிக்கப்படாத காரணத்தால் மரபணுப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு உண்மையைக் கண்டறியும் வாய்ப்பும் இல்லாமல் போய்விட்டது. அந்த மாணவன் தண்டிக்கப்படுகிறானோ அல்லது குற்றம் நிரூபிக்கப்படாமல் தப்பிவிடுகிறானோ என்பது ஒருபுறமிருக்க, மறுபுறத்தில் அவனின் எதிர்காலமே பாழடிக்கப்பட்டு விட்டது என்பது முக்கியமான விடயமாகும்.

இப்படியான சம்பவங்கள் காரணமாக பொலிஸ் திணைக்களத்தின் மீதான மக்களின் நம்பிக்கை கேள்விக்குள்ளாக்கப்படுவது தவிர்க்கப்பட முடியாததாகும். அதாவது ஒரு சில தகவல்களின் அடிப்படையில் ஒரு சிலரைக் கைது செய்வதும் பின்பு சித்திரவதைகள் மூலம் அவர்களிடம் ஒப்புதல் வாக்குமூலம் பெற்று அவர்களைக் குற்றவாளியாக்குவதுமான வழிமுறை கொண்டயா மூலம் அம்பலத்துக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. இது உண்மையான குற்றவாளிகளை இனம் காண்பதில் பொலிஸாரின் கையாலாகாத தன்மையா அல்லது பொறுப்பற்ற தன்மையா என்ற கேள்வி எழுகின்றது.

இத்தகைய நடைமுறை மூலம் இரண்டு ஆபத்துக்கள் உண்டு. ஒருபுறம் அப்பாவிகள் தண்டிக்கப்படுவதும், இன்னொரு புறம் குற்றவாளிகள் தப்பிவிடுவதுமான ஆபத்துக்களாகும் அவை.

குற்றவாளிகள் தண்டிக்கப்படாமல் விடுவதில் இலங்கை உலகிலேயே 6 ஆவது இடத்தை வகிப்பதாக சர்வதேச ஆய்வொன்று தெரிவிக்கிறது.

இலங்கையில் சித்திரவதைகள் மூலம் ஒப்புதல் வாக்கு மூலம் பெறப்படுவது அப்படியொன்றும் புதிய விடயமல்ல. பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்படுபவர்கள் மேல் இந்த முறையே மேற்கொள்ளப்படுகிறது.

சட்டத்தையும் ஒழுங்கையும் பேணவும் நீதியை நிலைநாட்டவுமே பொலிஸ் திணைக்களம் உருவாக்கப்படுகிறது. ஆனால் நீதியை மழுங்கடிப்பதில் பொலிஸாரே முன்னின்று செயற்பட்டால் நியாயங்களை நிலைநாட்ட முடியுமா?

எப்படியோ தற்சமயம் கொண்டயா குளத்தைக் கலக்கி விட்டுள்ளான். இதில் மீண்டு மிதக்குமா அல்லது மேலும் மேலும் ஆழத்துக்குப் போய்விடுமா என்பதைப்பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

# மன அழுத்தம் இல்லாத வாழ்க்கை வாழ...



சா தனையாளர்கள் மற்றவர்களை விட தங்களின் உணர்ச்சிகளை கட்டுப்படுத்தி; தங்களின் மன நிலைகளை சரியான முறைகளில் தக்க வைத்து கொள்வது மட்டுமல்லாமல், தங்களின் உணர்வுகளைப் புரிந்துகொண்டு அதனை திறமையாக வெளிப்படுத்துகின்றனர். அவர்களைப் போல் நாமும் சாதனையாள ராக மாறுவதற்கு சில பழக்கங்கள் இங்கே விவரிக்கப்படுகிறது. அந்த பழக்கங் களை நாமும் கற்றுக்கொண்டு மன அழுத்தம் இல்லாத வாழ்க்கையை வாழ்வோம்.

**1) கவனத்தை சிதறவிடக்கூடாது.**

சாதனையாளர்கள் தங்களின் கவனத்தை ஒரு போதும் சிதற விடமாட்டர்கள். ஒரு நேரத்தில் ஒரு பிரச்சினையை மட்டும் தான் பார்ப்பார்கள். ஒரே நேரத்தில் பல பிரச்சினைகளைப் பார்ப்பது தான் மன அழுத்தத்துக்கு முக்கிய காரணியாக அமைகிறது. அதனால் மற்ற பிரச்சினைகளைப் பிறகு பார்த்துக்கொள்வதுதான் நல்லது. எனவே நீங்கள் நிகழ்கால பிரச்சினைகளை மட்டும் பாருங்கள். கடந்த காலம் மற்றும் எதிர்கால பிரச்சினைகளை யோசித்து கவலைகொள்ளாதீர்கள். இது மன அழுத்தத்தை குறைப்பதற்குரிய சிறந்த வழி ஆகும்.

**2) பிரச்சினைகளைப் பார்த்துக் கவலை கொள்ளக் கூடாது.**

நமது செயல்களில் ஏதேனும் தவறு ஏற்படும் என்று நினைத்தால், அதற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ள வேண்டும். நமது செயல்கள் சரியான இலக்கை அடைய, விழிப்புணர்வோடு செயல்பட வேண்டியது மிக முக்கியமானதாகும். எல்லாப் பிரச்சினைகளைப் பற்றியும் கவலை அடைவதே நமது மன அழுத்தம் அதிகரிக்கக் காரணமாக உள்ளது.

**3) போராடுங்கள்; விட்டுக் கொடுக்க கூடாது.**

ஒரு சில நேரங்களில் நமக்கு எதிராக எல்லாச் செயல்களும் நடப்பது போல் அமையும். அந்த நேரத்தில் மனதைத் தளரவிடாமல் போராடி நமது இலக்கை அடைய வேண்டும். இந்த மனப்பக்குவமே சாதனையாளர்களையும் சாதனையற்றவர்களையும் வேறுபடுத்திக் காட்டுகிறது.

**4) மற்றொரு கோணத்தில் பாருங்கள்.**

ஒரு பிரச்சினை நம்மைச் சூழ்ந்திருக்கும்போது, சில நேரங்களில் அது பெரியதாக தோன்றும். அந்த நேரத்தில் அந்த பிரச்சினைகளில் இருந்து விலகியிருந்து மற்றொரு கண்ணோட்டங்களில் பார்த்துக்கொள்வது மிக முக்கியமானதாகும். எனவே பிரச்சினைகள் எழும்போது நாம் அமைதியாக தூங்கி எழுந்தால் அந்தப் பிரச்சினைகள் மிக எளியதாக தோன்றும். மற்றொரு கண்ணோட்டத்தில் பிரச்சினைகளைப் பார்ப்பதன் மூலம் புதிய கோணத்தில் அதற்கொரு முடிவு கிடைக்கிறது.

**5) எச்சரிக்கையாக அல்லது தயாராக இருக்க வேண்டும்.**

சிறந்த வாசிப்பு, புரிந்துகொள்ளுதல் மற்றும் விழிப்புணர்வோடு இருக்க வேண் டும். மேலும், மன அழுத்தம் இல்லாத வாழ்க்கை வாழ வேண்டும் என்று நினைத்தால், மன அழுத்த காலங்களில் அதை எதிர்கொள்ள நாம் தயாராக இருக்க வேண்டும்.

**6) அன்புக்குரியவர்களுடன் நேரத்தை செலவிடுங்கள்.**

நீங்கள் ஓய்வெடுக்கவும் மற்றும் உங்களின் அன்புக்குரியவர்களுடன் மகிழ்ச்சியாக இருக்கவும் நேரத்தை ஒதுக்க வேண்டும். உங்களின் நம்பிக்கைக்குரியவர்களிடம் நேரத்தை ஒதுக்கிச் செலவிடுவது, நீங்கள் ஓய்வெடுத்துக் கிடைப்பதைவிட மிக நிறைவாகவும், மகிழ்ச்சியாகவும் இருக்கும்.

**7) உறங்குதல், உடற்பயிற்சி, தியானம்.**

உங்களின் உணர்வுசார் நுண்ணறிவை அதிகரித்து மூளையை இலேசாக வைப்பதற்கு தூக்கம் முக்கியமானதாகும். சுய கட்டுப்பாடு, கவனம், மற்றும் நினைவகம் ஆகியவை மன அழுத்தத்தைக் குறைக்க பெரிதும் உதவியாக இருக்கும். பிரச்சினைகள் அதிகமாக இருக்கும் போது, உங்களின் கண்களை மூடிக்கொண்டு, உட்கார்ந்து, மூச்சு சுவாசப் பயிற்சியை மேற்கொள்ளவும். இதன் மூலம் உங்கள் மனம் அமைதி அடையும்.

**8) தாழ்வாக நினைப்பதை நிறுத்தவும்**

நம்மைப் பற்றி நாமே எதிர்மறையாக அல்லது தாழ்வாக நினைப்பதை நிறுத்திக் கொள்ள வேண்டும். ஏதாவது தவறாகச் செய்தாலும் அதை பற்றி கவலைப்பட வேண் டாம். ஏனென்றால் இதோடு உலகம் முடிவதில்லை. எப்போதும் உங்களை உயர்த்தி யே எண்ணுங்கள்.

# கவிதைப்புனல்

## தோழனுக்கு அறிவுரை



கடந்ததை நினைத்து
கலங்காதே
நடந்ததை நினைத்து
வருந்தாதே

காதல் கொண்டு
உன்னை
புரிந்து கொள்ளாத
தேசத்துரோகி

காமக்காறி அவளுக்கு
தேவைப்படுவதெல்லாம்
ஆடவரின் அங்கம் தான்
உன் அன்பல்ல
ஆட்டக்காறி அவள்
ரொம்ப மோசக்காறி
இனி புரிந்து கொள்

போலியான அவள் அன்பில்
காதல் இல்லை
கன்னியவள்
கண்டவனோடும் சுற்றும்
கட்டுக்கடங்காத பொல்லாத வேஷி

தப்பித்து விட்டுவிட்டாய்
எனச் சந்தோசப்படு
புதுவாழ்வை ஆரம்பிக்க
நடந்து வந்தாய் என ஆனந்தப்படு

வேலையில்லா உன்மேல்
கேலி செய்யும் குடும்பம்
உன்னை நினைத்து
ஒரு பொழுது
உனக்காய் ஏங்கும்

கடலின் அலையைப் பார்த்து
மனது ஆறுதல் பட்டும்
கடற்கரையிலே பல வேலையுண்டு
இணைந்து சம்பாதித்து கொள்

செய்யும் தொழிலே
தெய்வம்
மனக்கண்முன் நிறுத்திடு
வாழ்வாய் வளமாய்

பாழைபிடிப்போரை
ன்நோக்கித் தள்ளு
ஏணிப்படியில்
உன் கால்கள் ஏறட்டும்

**வே. வே. அகிலேஸ்வரன்,**
**மருதங்கேணியூர்**

## அதிசயங்கள்

பச்சோந்தி நிறம் மாறிப்
பார்த்திருப்பீர்கள்
மனிதன் நிறம் மாறிப்
பார்த்ததுண்டா?

குளம் வற்றிப் போகையிலே
கொக்கு வேறு இடம்மாறிப்
போவதை பார்த்திருப்பீர்கள்
பலம் வற்றிப் போனால்
மறுகட்சியில் ஒற்றைக்காலில்
நிற்கும்மனிதர்களைப்
பார்த்ததுண்டா?

உணவுக்காக கிளைவிட்டு
கிளைதாவும்
மந்திகளைப் பார்த்திருப்பீர்கள்
பதவிக்காக கட்சி விட்டு கட்சி தாவும்
மனிதர்களைப் பார்த்ததுண்டா?

மன்னர்முன் பாமர மக்கள்
மண்டியிட்டதை பார்த்திருப்பீர்கள்
ஆதிக்கமலைகளே குடிசை முன்
மண்டியிட்டதை பார்த்ததுண்டா?

வானும் கடலும் மாலைப்பொழுதில்
கைகோர்த்ததைப் பார்த்திருப்பீர்கள்
நீரும் நெருப்பும் ஒற்றுமையாக
மேடையில் கைகோர்த்ததைப்
பாத்ததுண்டா?

தொகையாகப் பணத்தைக் கொட்டி
கடவுளை தன் வீட்டில் அழைத்து
தரிசிப்பதைப் பார்த்திருப்பீர்கள்
தொகுதி மக்களை வீடு வீடாகச்
சென்று தரிசிப்பதைப்
பார்த்ததுண்டா?

இத்தனை அதிசயங்களும்
நடைபெறுவது
மாரியிலோ கோடையிலோ அல்ல
தேர்தல் காலத்தில்

**அ. அஜந்தன்**



# குடும்பத்தின் தரத்தை உயர்த்துவது எப்படி?

அருவி



வீடு என்ற கட்டடத்துக்குள் மனதாலும், உணர்வாலும், பண்பாலும், பாசத்தாலும் கட்டுண்டு இருக்கும் கோயிலே குடும்பம் ஆகும். இவை உறையும் இடம் உடல். படிப்பு மூலமாகப் பெறும் அறிவு, பயிற்சி ஆகும். தானே மனிதனாகி சமூகத்தில் பழக ஆரம்பிக்கும் பொழுது, அவனுடைய பழக்க வழக்கங்கள் சிறுவயதிலிருந்து சமூகத்தில் பெற்றவையாகும். ஒரு மனிதனுக்குரிய திறமைகளில் குணங்கள், பண்புகள் என்பனவும் அடங்கியுள்ளன . அவையே அவனை நல்லவனா, கெட்டவனா என நிர்ணயிப்பவை. அவற்றை அவனுக்குத் தருவது அவனது குடும்பம். அதேபோல் நமது தொழிலை நாம் கற்ற பாடங்களே நிர்ணயிக்கிறது. சமூகத்தில் ஒருவரை விரும்பி நாடுகிறார்களா, வெறுத்து ஒதுக்குகின்றார்களா என்பதை அவர்தம் வாழ்நாளில் கற்றுக்கொண்ட பழக்க வழக்கங்கள் நிர்ணயிக்கின்றன. தாம் ஏற்றுக்கொண்ட தொழிலில் எந்த அளவு உயர முடிகிறது என்பது அவர் குடும்பம் அவருக்கு அளித்த பண்புகளால் நிர்ணயிக் கப்பட்டது. பாடசாலையின் தரம் வாழ்க்கைத் தரத்தை நிர்ணயிப்பதால்தான் உயர்ந்த பாடசாலைகளை நாம் விரும்புகிறோம்.

பாடசாலையின் தரம், வாழ்க்கைத் தரத்தை நிர்ண யிப்பது போல், குடும்பத்தின் பண்பும், உயர்வும், வாழ்க்கையின் சிறப்பை நிர்ணயிக்கின்றன. எனவே குடும்பம் முக்கியம். அதனால் குடும்பத்தைப் போற்றி வளர்க்க வேண்டும். அவரவர்களுக்கு ஏற்பட்ட குடும்பத்தை மாற்ற முடியாது. என்றாலும், இருக்கும் நிலையைப் பாதுகாத்து, நல்லனவற்றைச் சேர்த்து பண்பை உயர்த்தும் முயற்சியை ஒவ்வொரு தலைமுறையிலும் செய்வதால்தான் ஒரு குடும்பம் உயர்வடைகிறது.

நாட்டில் குடும்பத்தைப் பொறுத்தவரை, அது சுருங்கும் நிலையே ஏற்பட்டுள்ளது. என்றாலும், படிப்பு, அறிவு, தெளிவு, பழக்கம், வெளிநாட்டைப் பற்றிய அறிவு ஆகியவற்றைப் பொறுத்தவரை அதிகமாகப் பெறும் வாய்ப்புகள் உற்பத்தியாகி இருக்கின்றன.

குடும்பங்கள் சீரழிய உதவக்கூடிய சில வாய்ப்புகளும் உற்பத்தியாகிக் கொண்டேயிருந்தாலும், குடும்பப் பண்பை உயர்த்த முயல்பவர்களுக்கு உதவியாகப் பல புதிய சூழ்நிலைகள் அவ்வப்போது ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன. குடும்பத்தின் தரத்தை உயர்த்துவது எப்படி? அதன் தரத்தை உயர்த்தும் குணங்களைக் பார்ப்போம்.

01. பொதுவான பொறுப்புகளைத் தானே முன் வந்து ஏற்றுக்கொள்ளும் மனப்பான்மை.

02. ஒரு வசதியை ஏற்படுத்தும் பொழுது மற்றவர் களுக்கெல்லாம் கிடைத்த பின்னரே தாம் பெறலாம் என்ற நோக்கம்.

03. குடும்பத்தில் எவருடைய குறையையும், மற்றவர்கள் பொருட்படுத்தாத நிலை.

04. பலருடைய சந்தோஷத்துக்காக அவர் விரும்பும் நல்ல காரியங்களை அவர் எவ்வளவு ஆர்வமாக நாடுவாரோ, அவ்வளவு உற்சாகத்தோட அவருக்காக அதைப் பெற்றுத் தரும் மனநிலை.

05. ஒரு காரியம் செய்யலாமா எனும் பொழுது மற்றவர்களை எப்படிப் பாதிக்கும் என்று யோசனை செய்த பிறகு செய்வது.

06. குடும்பத்துக்காக நான் உழைக்கிறேன் என்ற எண்ணம் தோன்றாமலிருப்பது.

07. நஷ்டத்தை ஒருவர் ஏற்படுத்திவிட்டால், அவர் மனம் புண்படக்கூடாது என்பதற்காக அதை நஷ்டமாகக் கருதாதது.

08. நாம் செய்யும் முயற்சிகள் நல்ல முறையில் உள்ளன என்பதற்குச் சில அடையாளங்களுண்டு. வாழ்க்கையில் எங்கு தோற்றாலும், சலிப்படைந்தாலும், வீட்டுக்குள் வந்தவுடன் அவற்றை மறந்து சந்தோஷம் அடைந்தால், குடும்பம் நல்ல முறையில் இருக்கிறது என்று பொருள்.




09. வீட்டில் உள்ள சந்தோஷம் அங்குள்ள வசதியைப் பொறுத்தில்லாமல் மனிதர்களைப் பொறுத்து மட்டும் இருந்தால் வீடு, குடும்பமாகிவிட்டது என்று பொருள்.

எனவே இவ்வாறான நிலைமை உங்களுக்கும், உங்கள் குடும்பத்தினருக்கும் இருக்குமானால் உங்கள் குடும்பம் மகிழ்ச்சியான குடும்பம் தான்.

## உருளைக்கிழங்கு போளி

### தேவையான பொருட்கள்



1. உருளைக்கிழங்கு - 10
2. உளுத்தம்பருப்பு - 1தக்கரண்டி
3. கடலைப்பருப்பு - 1 தேக்கரண்டி
4. முந்திரி பருப்பு - 10
5. கோதுமை மா - 2 கப்
6. பச்சை மிளகாய் - 2
7. கடுகு - 1 தேக்கரண்டி
8. உப்பு - தேவையான அளவு
9. நல்லெண்ணெய் - தேவையான அளவு
10. மஞ்சள் தூள் - சிறிது
11. கருவேப்பிலை - சிறிது.



### செய்முறை

1. உளுத்தம் பருப்பு, கடலைப்பருப்பு இரண்டையும் தனித்தனியாக வறுத்துப் பொடி செய்து வைக்கவும்.
2. ஒரு வாணலியில் எண்ணெய் ஊற்றி நறுக்கிய பச்சை மிளகாய், கருவேப்பிலை, போட்டு வதக்கவும்.
3. அதனுடன் வேகவைத்து உதிர்த்த உருளைக்கிழங்கு, உப்பு, மஞ்சள் தூள் கலந்து பூரணமாகக் கிளறி இறக்கி வைக்கவும்.
4. கோதுமை மாவில் உப்புடன் சிறிது எண்ணெய், தண்ணீர் சேர்த்து போளிக்கு பிசைவது போல் பிசைந்து கொள்ளவும்.
5. ஒவ்வொரு உருண்டையையும் எடுத்து அதனை தட்டி நடுவில் பூரணத்தை வைக்கவும்.
6. பிறகு சாதாரண போளி செய்வது போல் தோசைக்கல்லில் போளியைப் போட்டு எண்ணெய் (விரும்பினால் நெய் பயன்படுத்திக் கொள்ளலாம்) ஊற்றி இரண்டு பக்கங்களையும் வேக வைத்து எடுக்கவும்.

## கூட்டணிக்கு இந்தக்.....

(15 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டும் என்ற கேள்வி பலருக்கு எழலாம்.

ஒருகாலத்தில் கருணாவின் வலது கையாக இருந்து, பின்னர் கருணாவையே மிதித்துக் கொண்டு அரசியலில் மேலே வந்த பிள்ளையான் பிடிபட்டு, பல உண்மைகளைக் கக்கத் தொடங்கியுள்ளார். கருணாவும், பிள்ளையானும் ஒன்றாக இருந்த காலத்தில் செய்த அக்கிரமங்களையெல்லாம் இப்போது பிள்ளையான் சொல்லிவிட்டால், இதுதான் தருணமென்று கருணாவும் கம்பியெண்ண வேண்டி வரும். மஹிந்தவின் அரசியல் நிழல் இல்லாததாலேயே பிள்ளையான் இப்படி பிடிபட வேண்டியேற்பட்டது. அதேபோன்று தற்போது எந்த அரசியல் பலமும் இல்லாத நிலையில் தன்னையும் பிடித்தால், தனது விடுதலைக்கு குரல் கொடுக்க எவரும் இருக்கமாட்டார்கள் என்பது கருணாவுக்குத் தெரியும். எனவே தான் என்னதான் இலங்கை அரசியலில் ஆனந்த சங்கரி பின்தள்ளப்பட்டாலும்செல்லாக் காசாக இருந்தாலும், இந்திய மத்திய அரசின் கடைக்கண் பார்வை அவருக்குண்டு. அந்தப் பார்வையில் பட்டால் தானும் தப்பித்துவிடலாம் என்ற நினைப்பிலேயே கருணா, தமிழர் விடுதலைக் கூட்டணியில் இணைந்துள்ளார்.

இதுநாள் வரை கொலைகாரன் என்று எந்தக் கருணாவை ஆனந்த சங்கரி திட்டித் தீர்த்தாரோ, அதே கருணாவை எப்படித் தன் கட்சிக்குள் இணைக்கச் சம்மதம் தெரிவித்தார்? உண்மையில் வயதின் தள்ளாமையும், அரசியல் ஊன்று கோலின்மையும் ஆனந்த சங்கரியை மிகவும் பலவீனப்படுத்தியிருந்தன. எனவே தமிழர் விடுதலைக் கூட்டணியை மீண்டும் பலம் பெறச் செய்ய அவர் எந்தப் பேயோடும் உறவு கொள்ளத் தயாராக இருந்தார். ஆனால் மூழ்கும் கப்பலில் பயணிக்கும் தைரியம் யாருக்கும் வராததால் ஆனந்தசங்கரியின் பக்கமோ, தமிழர் விடுதலைக் கூட்டணியின் பக்கமோ யாரும் எட்டியும் பார்ப்பதில்லை. ஆனால் கடலில் மூழ்கும் போது கையில் மரக்கட்டை கூட கிடைக்காமல் திண்டாடிய கருணாவுக்கு மூழ்கும் கப்பல் வரப்பிரசாதம் தானே. எனவே துணிந்து ஏறிவிட்டார்.

சிலரின் கூட்டு முன்னேற்றத்துக்கு உதவும். ஆனால் இவர்களின் கூட்டோ தமிழர்களினதும், தமிழர் விடுதலைக் கூட்டணி என்ற பாரம்பரியமான அரசியல் சக்தியின் வீழ்ச்சிக்குமே வித்திடப் போகின்றது.

நல்லவேளையாக இப்போது தமிழர் விடுதலைக் கூட்டணியை உருவாக்கிய தந்தை செல்வா, ஜீ.ஜீ.பொன்னம்பலம், தொண்டமான் ஆகியோர் உயிரோடு இல்லை. இருந்திருந்தால் இரத்தக் கண்ணீரல்லவா வடித்திருப்பார்கள்.

## அக்கினிப் பெண்களும்.....

(08 ஆம் பக்கத் தொடர்ச்சி)

...ன்னை அணுகினார்.

கண்ணகி எவ்வளவு நல்லவள் அவள் ஒரு பத்தினி இப்படியான அணுகுமுறைகளை இனிக் ...கைவிட வேண்டும். தன் கணவன் ...கொல்லப்பட்டுவிட்டான் ...என்பதற்காக ஒரு பெரும் ...ஊரையே கொளுத்தினாள் அதனால் அவள் கற்புக்கரசி என்று ...நிரூபிக்கும் முறையை ...தவிர்க்கவேண்டும். ஏனெனில் இவ்வண்ணம் பார்க்கப் போனால் ஈழப்பெண்கள் எரிக்க நினைத்திருந்தால் இங்கிருந்து சர்வதேசம் வரையல்லவா பற்றியிருக்க வேண்டும்.(அது ஒரு இயற்கை அனர்த்தம் என்ற கருதுகோள்கள் பலவும் முன்வைக்கப் பட்டுவிட்டன) இங்கு முக்கியமாக குறிப்பிட வேண்டியது கண்ணகியின் சமூகப் பிரக்ஞை அற்ற தன்மை. இழந்தது அவள் ஆருயிர்க் கணவனே என்றாலும் அவளிற்கு சமூகத்தை தண்டிக்கும் உரிமை இல்லை.

அழிப்பதால் பெண் எதையும் சாதித்து விடப் போவதில்லை.

ஆக பெண் என்பவள் முதலில் தனக்கான புரிதலைக் கொண்டிருக்க வேண்டும். சமூகத்தைப் பற்றிய ஒரு பிரக்ஞை கொண்டிருக்கவேண்டும். சுதந்திரமான பெண்கள் பலரும் சமூகம் பற்றி சிந்திப்பதற்கு தயங்குகின்றனர். சமூகம் பற்றி சிந்திக்கும் பலருக்கும் சுதந்திரம் என்பது மட்டுப் படுத்தப்பட்ட ஒன்றாகவே இருக்கின்றது. உண்மையில் சமூகம் பற்றிய புரிந்துணர்வை பெற எங்களால் இயலவில்லை என பல பெண் தோழிகள் கூறக் கேட்டிருக்கின்றேன்.

நூல்கள் இலக்கியங்கள் அன்றாட செய்திப் பத்திரிகைகள் மாத இதழ்கள் பலவற்றிலும் பல சமூக சிந்தனைகள் சமூக கண்ணோட்டங்கள் பிரச்சனைகள் எல்லாம் கொட்டிக் கிடக்கின்றது. நம் வீட்டுக் கூரை எரியும் வரை அடுத்த வீடுத் தீயை ரசித்துக் கொண்டிருக்கும் மன நிலையை விடுத்து நம் வாழ்வுக் குடிலை சமூக உணர்வோடு அமைத்துக் கொள்வோம்.

## கிரிக்கெட்டில்.....

(09 ஆம் பக்கத் தொடர்ச்சி)

...துவரை சர்வதேச தொடர்களுக்குச் ...ட்டப்பட்டதனாலும் இந்திய - ...தென்னாபிரிக்கத் தொடருக்கு சச்சின் - ...லிஸ் என்றாவது பெயர் வைத்திருக்க ...வண்டும்.

அதேசமயம் ஜக் கலிஸ் சிறந்த வீரர் ...ன்பதில் எந்தவிதமான சந்தேகமு ...ல்லை. சர்வதேச கிரிக்கெட்டில் அவர் ...பற்ற ஓட்டங்களும் விக்கெட்டுக்களும் ...தனை நிரூபிக்கின்றன. ஆனாலும் ...ண்டுல்கர் விளையாடும் காலத்தில் ...வருக்கு நிகராகக் கருதப்பட்டவர்களில் ...ருவர் அல்ல ஜக் கலிஸ். பிறைன் ...ரா, றிக்கி பொண்டிங், குமார் சங்ககார ...ான்றவர்களுக்கு சமமாக கலிஸை ...ன்நிறுத்துவதில் கிரிக்கெட் ...மர்சகர்களிடம்கூட ஏகோபித்த ...ணநிலை இல்லை.

உதாரணத்திற்கு இந்திய - ...மற்கிந்தியத் தீவுகள் தொடருக்கு சச்சின் ...லாரா தொடர் என்று பெயர் வைத்தால் ...பொருந்தும் அளவுக்கு இந்திய - ...தென்னாபிரிக்கத் தொடருக்கு சச்சின் - ...லிஸ் தொடர் என்று பெயர் வைத்தால் ...து கிரிக்கெட் உலகில் ஏற்றுக்கொள்ளப் ...ட்டிருக்குமா என்பது சந்தேகமே. ...எனவே எதிர்காலத்தில் சச்சின் - லாரா ...தொடரைக் கருத்தில் கொண்டு கூட ...தென்னாபிரிக்கத் தொடருக்கு சச்சினின் ...பெயரைத் தவிர்த்திருக்கவும் வாய்ப்பு ...ள்ளது. எனவே இருநாடுகளிலும் ...அத்தகைய சமதையான வீரர்களைத் ...தெரிவு செய்வதில் ஏற்பட்ட குழப்ப ...நிலையே இத் தொடரின் பெயரை அரசியல் தலைவர்களை நோக்கி இழுத்துச் சென்றிருக்க வேண்டும்.

அந்த வகையில் விளையாட்டு அரசியல் எல்லைகளைத் தாண்டியது என்றாலும் இந்தியாவில் நடைபெற வுள்ள இந்திய - தென்னாபிரிக்க அணிகளுக்கிடையிலான தொடருக்கு காந்தி - மண்டேலா என்ற இருபெரும் அரசியல் தலைவர்களின் பெயரிட்டுள்ளமை வரவேற்பிற்குரிய ஒன்றே.



ஏனென்றால் தென்னாபிரிக்க கிரிக்கெட் அணிக்கு 1970 முதல் விதிக்கப்பட்ட தடையினை 1990 பெப்ரவரியில் தனது 27 வருட கால சிறைவாசத்தை முடித்துத் திரும்பிய நெல்சன் மண்டேலா அவர்கள் தென்னாபிரிக்க அணி மறுபடியும் சர்வதேச கிரிக்கெட்டில் விளையாடுவதற்கு ஏதுவாக நீக்க வேண்டும் என்று தனிப்பட்ட ரீதியில் அவர் சர்வதேச கிரிக்கெட் சபையிடம் வெளியிட்ட வேண்டுகோள் முக்கியத்துவம் வாய்ந்தது. 1994ஆம் ஆண்டு தென்னாபிரிக்காவுக்கு ஜனாதிபதியாக மண்டேலா வருவதற்கு முன்னரேயே அவர் அக்கோரிக்கையை முன்வைத்தது தான் இங்கு கவனத்தில் கொள்ள வேண்டிய விடயம்.

மகாத்மா காந்தி தென்னாபிரிக்காவில் வாழ்ந்த காலத்தில் அவரது வாழ்க்கை யில் ஏற்பட்ட சில அனுபவங்களே திருப்புமுனையாகி இந்திய சுதந்திரப் போராட்டத்தில் அவர் முனைப்புடன் போராட வழிவகுத்திருந்தது. அந்தவகை யில் இந்திய - தென்னாபிரிக்க நாடுகளுக்கிடையில் ஒரு வரலாற்றுத் தொடர்பும் இருக்கின்ற காரணத்தினா லும் நெல்சன் மண்டேலாவிற்கு நிகரான தலைவராக காந்தியைத் தவிர இன்னொருவரை இந்தியாவில் இனம்காட்ட முடியுமா என்ற நிலையில் இத்தொடருக்கு அவர்களின் பெயர்களை வைத்தது மிகப் பொருத்தமானதே.

இந்தியாவிற்கும் தென்னாபிரிக்கா வுக்குமான கிரிக்கெட் தொடர்புகளில் முக்கியத்துவம் வாய்ந்தது தென்னாபிரிக்காவுக்கான தடையை நீக்க வேண்டும் என்பதில் காத்திரமான நடவடிக்கையை இந்திய கிரிக்கெட் சபையும் எடுத்திருந்தது என்பது. அதனால் தான் தடை நீங்கிய பின் முதன் முதலில் இந்தியாவில் மூன்று ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் தென்னாபிரிக்க அணி விளையாடியதும் தடைக்குப் பின்னர் தென்னாபிரிக்காவில் சர்வதேச தொடர் விளையாடிய முதல் நாடாக இந்திய அணி விளங்கி இருந்தமையையும் சுட்டிக்காட்டலாம்.

இன்னொரு புறம் கிரிக்கெட் விளையாட்டானது வரையறுக்கப்பட்ட சில நாடுகளுக்குள்ளேயே ஆடப்பட்டு வருகின்ற நிலையில் இச்செயற்பாடா னது இரு அரசியல் தலைவர்களது புகழின் வெளிச்சத்தில் கிரிக்கெட் விளையாட்டை சர்வதேச ரீதியில் பரவல் அடையச் செய்வதற்கான மூலோபாயமாகவும் அமையலாம்.

ஏனென்றால் ரென்னிஸ் போன்ற விளையாட்டுக்களில் ஈடுபடும் வீராங் கனைகள் சிலருக்கே கிரிக்கெட் போட்டி களில் உலக சாதனை படைத்த வீரர்களின் பெயர் கூடத் தெரியாதிருந் ததை கடந்த காலங்களில் நாம் அறிந்தே இருக்கின்றோம்.

எனவே தமது கொள்கைகளாலும் இலட்சியப் பிடிப்பான வாழ்க்கையினா லும் உலக மக்கள் மனதில் இடம்பிடித்த மகத்தான இரு அரசியல் தலைவர்களின் பெயர்களில் இத்தொடர் அழைக்கப்படு வது கிரிக்கெட் வரலாற்றில் பிறிதொரு அத்தியாயத்தை தோற்றுவித்துள்ளது என்றே தோன்றுகின்றது. அத்தோடு வெள்ளையருக்கு எதிராகப் போராடிய இவ்விரு தலைவர்களினதும் ஒருங் கிணைந்த பண்பு அவ்வெள்ளையரால் உருவாக்கப்பட்ட கிரிக்கெட் என்றதொரு புள்ளியிலும் கைகூடுவது உண்மையிலே ஆச்சரியமானது தான்.

இவ்வார

# இராசி பலன்

04.11.2015 –10.11.2015



மேஷம்

**அச்சுவினி, பரணி, கார்த்திகை 1ஆம் பாதம்**

சாதுரியமாக செயல்பட்டு வெற்றி காண்பீர்கள். எதிரியும் பாராட்டும் சூழ்நிலை உருவாகும். குடும்பத்தில் ஒற்றுமை பலம் பெறும். வாகன பராமரிப்புச் செலவு ஏற்படும். புத்திரர் படிப்பு, வேலையில் முன்னேற்றம் காண்பர். விவகாரம் அணுகாத சுமுக வாழ்வு உருவாகும். மனைவியால் குடும்பத்தில் ஒற்றுமை சிறக்கும். தொழில், வியாபார வளர்ச்சியால் ஆதாயம் அதிகரிக்கும். பணியாளர்கள் பணியிலக்கை விரைந்து முடிப்பர். பெண்கள் மனம் போல புத்தாடை அணிகலன் வாங்குவர்.



ரிஷபம்

**கார்த்திகை 2, 3, 4ஆம் பாதங்கள்**

நீண்ட நாள் முயற்சி வெற்றி பெறும். மனதில் உற்சாகம் உண்டாகும். தாய்வழி உறவினர்களின் உதவி கிடைக்கும். புத்திரர் நல்பழக்க இலக்கையாகப் பழகுவர். ஆரோக்கியம் பலம் பெறும். பணிகளில் பெரும்பகுதியை அடைப்பீர்கள். மனைவியின் செயல்பாடு கண்டு மகிழ்வீர்கள். தொழில், வியாபாரத்தில் உழைப்புக்கேற்ற லாபம் கிடைக்கும். பணியாளர்கள் பணியிடத்தில் செல்வாக்குடன் திகழ்வர். பெண்கள் சுபநிகழ்ச்சிகளில் பங்கேற்று மகிழ்வர். மாணவர்கள் ஆர்வமாய்ப் படிப்பர்.



மிதுனம்

**மிருகசீரிடம் 3, 4ஆம் பாதங்கள்**

[illegible] பயணம் பயன் அறிந்து மேற்கொள்ளவும். வாகன வகையில் பராமரிப்பு செலவு உண்டாகும். புத்திரரின் குறையை இதமான அறிவுரையால் சரிசெய்வது நல்லது. எதிர்பார்த்த பணவரவு கிடைக்கும். பகைவரை நண்பர் உள்ளவரும் அன்பு பாராட்டுவர். மனைவியின் பாசம் கண்டு மனம் நெகிழ்வீர்கள். தொழில் வளர்ச்சியால் ஆதாயம் அதிகரிக்கும். பணியாளர்கள் திட்டமிட்டு செயல்பட்டு பணியை விரைந்து முடிப்பர்.



கடகம்

**புனர்பூசம் 4ஆம் பாதம், பூசம், ஆயிலியம்**

வாகன பயணத்தால் இனிமை காண்பீர்கள். புத்திரரின் உடல்நலத்தில் உரிய கவனம் வேண்டும். எதிரியும் விலகிச் செல்லும் சூழல் உருவாகும். மனைவி விரும்பிய பொருள் வாங்கித் தருவீர்கள். வெளியூரிலிருந்து எதிர்பார்த்த சுபசெய்தி வரும். தொழில், வியாபாரத்தில் புதிய சீர்திருத்தங்களைச் செய்வீர்கள். பணியாளர்கள் புதிய தொழில் நுட்பங்களை அறிய முற்படுவர். பெண்கள் குடும்ப நலனுக்காகப் பாடுபடுவர்.



சிம்மம்

**மகம், பூரம், உத்திரம் 1ஆம் பாதம்**

வாகனத்தில் மிதவேகம் பின்பற்றுவது நல்லது. புத்திரரின் செயல்களை கண்டிக்கும் சூழ்நிலை உருவாகும். கடன், நோய் தொந்தரவு குறையும். மனைவி இன்ப, துன்பங்களில் சமபங்கு கொள்வார். தொழில், வியாபாரத்தில் பங்குதாரர்களின் ஆதரவால் வளர்ச்சி உண்டாகும். பணியாளர்கள் விண்ணப்பித்த கடனுதவி கிடைக்கப் பெறுவர்.



கன்னி

**உத்திரம் 2, 3, 4ஆம் பாதங்கள்**

கடந்த கால நற்செயலுக்கான பலன் வந்து சேரும். வாகனத்தில் அறிமுகம் இல்லாதவருக்கு இடம் தர வேண்டாம். புத்திரர் படிப்பு, வேலையில் முன்னணி வகிப்பர். விலகிய உறவினரும் விரும்பி வந்து சொந்தம் பாராட்டுவர். மனைவியின் ஆலோசனையைக் கேட்டு பாராட்டுவீர்கள். தொழில், வியாபாரத்தில் குறுக்கிடும் தடைகளை சாதுரியமாக சரி செய்வீர்கள்.



துலாம்

**சித்திரை 3, 4ஆம் பாதங்கள்.**

கருத்து பேதம் கொண்டவர்களிடமிருந்து சமயோசிதமாக விலகுவீர்கள். உடன் பிறந்தவர்கள் அன்பு பாராட்டுவர். பூர்வீக சொத்து மூலம் வளர்ச்சி உண்டாகும். சொத்தில் வருமானம் அதிகரிக்கும். புத்திரர் உங்களின் வழிகாட்டுதலைக் கேட்டு வளர்ச்சிப்பாதையில் முன்னேறுவர். இஷ்ட தெய்வ வழிபாடு சிறக்கும். மனைவி விரும்பிய பொருளை வாங்கித் தருவீர்கள். தொழில், வியாபாரத்தில் அதிக பணவரவு கிடைக்கும்.



விருச்சிகம்

**விசாகம் 4ஆம் பாதம், அனுஷம், கேட்டை**

புத்திரரின் அதிரடியான செயல்பாடு திகைப்பை ஏற்படுத்தும். உடல் நலனில் கவனம் தேவை. மனைவியின் கவனக்குறைவை கண்டிப்பதில் மென்மையான அணுகுமுறை தேவை. தொழில், வியாபாரத்தில் மந்தநிலை மாறி லாபம் அதிகரிக்கும். பணியாளர்கள் பணியிடத்தில் விவாதத்தில் ஈடுபடுவது கூடாது. பெண்கள் பிறருக்காக எவ்வித பொறுப்பும் ஏற்க வேண்டாம். மாணவர்கள் படிப்பில் மட்டும் கவனம் செலுத்தவும்.



தனுசு

**மூலம், பூராடம், உத்திராடம் 1ஆம் பாதம்**

குடும்பத்தில் மங்கல நிகழ்ச்சி நடத்தும் சூழல் உருவாகும். புத்திரர்களின் செயல்பாடு கண்டு மகிழ்வீர்கள். நிலுவைப் பணம் வசூலாகும். மனைவியின் எதிர்பார்ப்பை நிறைவேற்றுவீர்கள். தொழில், வியாபாரத்தில் லாபம் பன்மடங்கு அதிகரிக்கும். பணியாளர்களுக்கு எதிர்பார்த்த சலுகை கிடைக்கும். பெண்கள் சந்தோஷ வாழ்வு காண்பர். மாணவர்கள் படிப்பில் அக்கறை கொள்வர்.



மகரம்

**உத்தராடம் 2,3,4ஆம்பாதங்கள்.**

புத்திரர், உங்கள் சொல் கேட்டு நடப்பர். எதிரிக்கும் உங்கள் மீது நல்ல எண்ணம் ஏற்படும். மனைவி செயல்பாடு குடும்ப ஒற்றுமையைப் பாதுகாக்கும். தொழில், வியாபாரத்தில் வருமானம் பன்மடங்கு உயரும். பணியாளர்கள் பணியிலக்கை விரைந்து முடிப்பர். பெண்கள் இஷ்ட தெய்வ வழிபாட்டில் ஈடுபடுவர். மாணவர்களின் விருப்பத்தை பெற்றோர் நிறைவேற்றி வைப்பர்.



கும்பம்

**அவிட்டம் 3,4 ஆம் பாதங்கள்.**

புத்திரரின் செயல்பாட்டை கண்டிப்பதில் மென்மை தேவை. ஆரோக்கியம் சீராக இருக்கும். மனைவி வழி உறவினர்களுடன் கருத்து வேறுபாடு உண்டாகும். தொழில், வியாபாரத்தில் உழைப்புக்கு முன்னேற்றம் காண்பீர்கள். லாபம் பெருகும். பணியாளர்கள் பணிச்சுமையைச் சந்தித்தாலும் அதற்குரிய பலன் கிடைக்கும். பெண்கள் பிறருக்காக பணப்பொறுப்பு ஏற்க வேண்டாம். மாணவர்கள் படிப்பு தவிர பிற விஷயத்தில் ஈடுபட வேண்டாம்.



மீனம்

**பூரட்டாதி 4ஆம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி**

எதிரி தொல்லை விலகும். பணி நிறைவேற புதிய உத்தியைக் கையாள்வீர்கள். வாகன பயணம் இனிமை சேர்க்கும். புத்திரர் அறிவுத்திறனில் மேம்படுவர். ஆரோக்கியம் பலம் பெறும். மனைவியின் ஆலோசனையை ஏற்று நடைமுறைப்படுத்துவீர்கள். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சிக்கான காலகட்டம். ஆதாயம் அதிகரிக்கும். பணியாளர்கள் சக ஊழியர்களின் ஆதரவைக் கண்டு மகிழ்வர்.

# சுதந்திர வேட்கை

அடேல் பாலசிங்கம்

## விடுதலைப் போராட்டம் பற்றிய ஒரு பதிவு

110



ஒப்பந்தம் கைச்சாத்தாவதற்கு முன்னதாக புரிந்த குற்றங்கள் தொடர்பாக விசாரணை செய்யப் போவதாகக் கூறினார்கள். குமாரப்பாவும், புலேந்திரனும் மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டங்களின் மூத்த தளபதிகளாகத் திகழ்ந்தவர்கள். பல சமர்களில் வெற்றி வாகை சூடியவர்கள். கிழக்கு மாகாணத் தமிழ் மக்களால், போர்க்கள நாயகர்களாக உயர்ந்து ஏற்றப்படுபவர்கள். புகழ் பெற்ற இந்தக் கெரில்லாத் தலைவர்களைத் தேடி வேட்டையாடப் பல ஆண்டுகளாக முயற்சித்துத் தோல்வி கண்ட லலித் அத்துலத் முதலி, இந்தத் தளபதிகள் தமது படையினரால் கைதாகி காவலில் இடப் பட்டமை, தமது அதிர்ஷ்டம் என்றே கருதினார். கொடுமைக்குப் பெயர் பெற்றவர்களும், லலித் அத்துலத் முதலியின் கீழ் இயங்குபவர் களுக்குமான புலனாய்வுப் பிரிவினரிடம் விசாரணைக்காக "எமது போராளிகள் கொழும்புக்கு அனுப்பப்பட்டால் , அவர்களுடைய உயிருக்குப் பேராபத்து நேரும் என்பதை நாம் முழுமையாக உணர்ந்தோம். அவர்களைப் பழிவாங்க வேண்டும் என்று லலித் அத்துலத் முதலி எவ்வளவு வெறியாக இருந்தார் என்பதும் எமக்குத் தெரியும். 'விசாரணை' என்பது சிறீலங்கா காவல்துறை அதிகாரத்தில் வேறு அர்த்தம் கொண்டது. அது சித்திரவதையைக் குறிக்கும். மேலும், விடுதலைப்புலிகள் என்றால், எழுந்தமானக் கொலைத்தீர்ப்பு சிங்களக் காவல்துறையினரிடமும் இராணுவ அதிகாரிகளிடமும் அகப்படும் தடுப்புக்காவல் கைதிகளின் மனித உரிமை மீறல்களின் கறைபடிந்த வரலாறுகள் எமக்குத் தெரியுமாதலால், இப்போது காவலில் இடப்பட்டிருந்த எமது போராளிகளும், சித்திரவதைக்கும், எழுந்தமானப் படுகொலைக்கும் உள்ளாவார்கள் என்பதில் எமக்குச் சந்தேகம் இருக்கவில்லை.

அமைதிப்படை அனுமதியோடு, குமரப்பா, புலேந்திரனையும் ஏனையோரையும் பாலா சந்தித்தார். இவர்களில் பெரும்பாலான வர்கள் எமக்கு அறிமுகமானவர்கள். அவர்களுக்கு ஏற்பட்டிருக்கும் புதிய கதி பற்றி அவர்களுக்குப் பாலா எடுத்துரைத்தார். அவர்கள் அதிர்ச்சியும் சீற்றமும் அடைந்தார்கள். விசாரணைக்கு என்று தாம் கொழும்புக்குக் கொண்டு செல்லப்பட்டால் சித்திரவதை, அடுத்து மரணத்தை சந்திக்க நேரும் என்பதை உணர்ந்தார்கள். தங்கள் முடிவை அவர்கள் தம்மிடையே விவாதித்து, ஏகமனதான தீர்மானத்துக்கு வந்தார்கள். தங்கள் தலைவர் பிரபாகரனுக்கு அவர்கள் எழுதிய கடிதங்களில், தங்கள் விருப்பத்தைத் தெரிவித் தார்கள். துயரமும் கொடுமையும் நிறைந்த இந்த நிகழ்ச்சித் திருப்பங்களை பிரபாகரனிடம் விபரித்த பாலா, கடிதங்களையும் ஒப்படைத்தார். ஏகமனதாகவும், இரகசியமாகவும் அந்தப் போராளிகள் மேற்கொண்ட முடிவை அவர்களுடைய கடிதங்கள், விடுதலைப் புலித் தலைவருக்குக் கூறின. 'விசாரணை' என்ற போர்வையில் காட்டுமிராண்டித்தனமான சித்திரவதைக்கும், அநேகமாக மரணத்துக்கும் சிங்கள அரசினால் தாம் உள்ளாக்கப்படுவதைக் காட்டிலும், விடுதலைப்புலி மரபுப்படி, தம் உயிரைத் தாமே மாய்க்கத் தாம் விரும்புவதாகத் தங்கள் தலைவருக்குத் தெரிவித்திருந்தார்கள். சிங்கள இனவாத அரசின் நிர்ப்பந்தங்களுக்குப் பணிந்து கொடுத்தால் , அது தங்கள் எதிரிக்கு எதிராக நடத்தும் தற்காப்புப் போரின் நீண்ட உறுதியான வரலாற்றைக் கறைபடுத்தி விடும் என்றும், அதற்கு நேரெதிராக, கௌரவமான மரணத்தைத் தழுவ தாம் விரும்புவதாக வும் அவர்கள் தெரிவித்திருந்தார்கள். சயனைட் குப்பிகளை அனுப்பி வைக்குமாறு அவர்கள் கேட்டிருந்தார்கள். **(பதிவு தொடரும்)**

# அது என்ன?



1. வாயில்லை புத்திமதிகள் சொல்வான்
காலில்லை கடந்தும் செல்வான்
கையில்லை உளங் காட்டிக் கொள்வான்
உயிரில்லை ஒரு நாளும் சாக மாட்டான். - அது என்ன?



2. மேலே பறக்கும் பருந்தல்ல
கட்டுண்டு இருக்கும் மாடல்ல
அழகான வாலுண்டு குரங்குமல்ல - அது என்ன?



3. ஊர் உண்டு மக்களில்லை
மலையுண்டு மரங்களில்லை
ஆறுண்டு நீரில்லை
அணையுண்டு கல்லில்லை
வழி உண்டு வாகனமில்லை
வண்ணமுண்டு உயிரே இல்லை - அது என்ன?



4. குடிக்கத் தண்ணீர் உண்டு
குளிக்கத் தண்ணீர் இல்லை - அது என்ன?



5. மனிதன் போடாத பந்தலிலே
மலர்ந்து கிடைக்குது பூ - அது என்ன?



6. காலும் கையும் உண்டு. விரல் இல்லை
முதுகு உண்டு. தலை இல்லை
தன்னைத் தேடி வந்தோரைச் சுமப்பான். - அது என்ன?



7. ஆற்றைக் கடக்கும். அக்கரை போகும்
தண்ணீரில் கலக்காது. தானும் நனையாது - அது என்ன?



8. வெயிலில் காயும்
மழையில் நனையும்
அண்டி வருவோர்க்கு
அடைக்கலமும் தரும் - அது என்ன?



9. யாரும் செய்யாத கதவு
தானே திறக்கும் தானே மூடும் - அது என்ன?



10. கனலைப் பிடித்து கண்ணீர் வடிக்கும்
கடைசியில் கரைந்தும் போகும் - அது என்ன?

# பெரியவர்கள் பேச்சை மீறினால்.............

செழிப்பான ஒரு புல்வெளியில் ஆடுகள் மேய்ந்து கொண்டிருந்தன. அவற்றை மேய்த்துக் கொண்டு வந்தவன், மரத்தடியில் உட்கார்ந்து கண் மூடி. புல்லாங்குழல் வாசித்துக் கொண்டிருந்தான்.

புல்வெளியைச் சுற்றி வேலி போடப்பட்டிருந்தது. அதன் அருகே, ஓர் ஆட்டுக்குட்டி மேய்ந்து கொண்டிருந்தது. வேலிக்கு வெளிப்பக்கம் இருந்த ஓநாய் ஒன்று ஆட்டுக் குட்டியைப் பார்த்தது.

வேலிக்குள் முகத்தை நுழைத்துக் கொண்டு. ஓநாய் எதையோ பார்ப்பது போலப் பாசாங்கு செய்தது. அதைப் பார்த்த ஒரு ஆட்டுக்குட்டி, உனக்கு என்னவேண்டும்? என்று கேட்டது.

ஓநாய், "நண்பா... இங்கே இளசான புல் கிடைக்கும் போலிருக்கிறது. இளம்புல் என்றால் எனக்கு மிகவும் பிடிக்கும். அதைத் தின்று, ஜில்லென்று தண்ணீர் குடித்தால் எவ்வளவு நன்றாக இருக்கும். உங்களுக்கெல்லாம் அந்த யோகம் கிடைத்திருக்கிறது. எனக்கு அது கிடைக்கவில்லை..." என்று வருத்தத்துடன் கூறியது.

அப்படியா? "நீ புல்லையாச் சாப்பிடுவாய்? நீ மாமிசத்தைத்தான் சாப்பிடுவாய் என்று என் அம்மாவும் அப்பாவும் சொன்னார்களே...?" என்று ஆச்சரியத்துடன் கேட்டது ஆட்டுக் குட்டி.

"சேச்சே... அதெலாம் சுத்தப் பொய். நான் சைவம்" என்றது ஓநாய்.

"அப்படியென்றால் இரு. நான் வெளியே வந்து. இந்த வேலியைக் கடந்து இந்தப் புல்வெளிக்குள்ளே வருவதற்கான வழியைக் காட்டுகிறேன்" என்றபடி அருகிலிருந்த வேலி இடைவெளியின் வழியாக வெளியே வந்தது.

உடனே ஓநாய் அதன் மீது பாய்ந்து அதைக் கொன்று தின்றது.

குழந்தைகளாக இருப்பவர்கள் பெரியவர்கள் சொன்னதை நினைவில் கொண்டு. அதன்படி என்றும் நடக்க வேண்டும். இல்லையேல் ஆபத்தில் மாட்டிக் கொள்ள நேரிடும்.



# சிறுவர் உலகம்





இந்த இரு படங்களிலும் உள்ள வித்தியாசங்களைக் கண்டு பிடியுங்கள்

## மயிலே குயிலே

மயிலே, மயிலே ஆடிவா
மக்காச் சோளம் தருகிறேன்!
குயிலே, குயிலே பாடிவா
கோவைப் பழங்கள் தருகிறேன்!
பச்சைக் கிளியே பறந்துவா
பழுத்த கொய்யா தருகிறேன்!
சிட்டுக் குருவி நடந்துவா
சட்டை போட்டு விடுகிறேன்!
ஓடைக் கொக்கு இங்கே வா
ஓடிப் பிடித்து ஆடலாம்!
மாடப் புறாவே இறங்கிவா
மடியில் குந்திப் பேசலாம்!



# சிறுகதை

# நம்பிக்கையின் பரிசு



■ கயல்விழி

குழந்தையை அழைத்துக் கொண்டு தோட்டத்துக்குச் சென்றிருந் தேன். அங்கும் அவனது மனதுக்கு ஆறுதல் கிடைக்கவில்லை. இன்று ஞாயிற்றுக்கிழமை. விடுதியில் இருந்த பிள்ளைகளைப் பார்க்க உறவினர்கள் பெற்றோர்கள் என, பரிசுப் பொருள் களுடன் வந்திருந்தார்கள். அவர்களைக் காணுகையில் அந்த பிஞ்சு மனம் எதை எதிர்பாக்கும். எத்தனை தடவை என்னைக் கேட்டிருக்கிறான். செல்வி 'ஆன்ரி' எப்ப வருவா மேடம் என்று. அநாதையான தனக்கு ஆறுதலே செல்வி தான் என்று அந்த பிஞ்சு எண்ணியிருக்க வேண்டும். ஒரு தாய் ஆன்ரியாக வேடம் போட்டபடி 5 வருடங்கள் ஓடிப்போய் விட்டன. தாய்மை வலிக்காமல் விடுமா? ஓரிரு மாதத்துக்கு ஒரு முறை இங்கு வந்து போவாள். இரத்தம் பகிர்ந்த உறவுகளின் சந்திப்பு கைவிட்டு எண்ணக்கூடிய நாள்களில் அடங்கிப் போய்விட்டது. ஏன் செல்வி ஆன்ரி என்னை மட்டும் என் அப்பா அம்மாக்கு பிடிக் கேல்லை நான் என்ன செய்த னான். எத்தனை தடவை ஏங்கி அவளிடமே கேட்டிருக்கும் பச்சைக்குழந்தை. என்னோடு கண்ணீரில் பகிர்ந்து கொள்வாள். கவலைப்படாதே என்று சொல்வதைத் தவிர என்னால் என்னத்தை சொல்லிவிட முடியும். ஏற்கனவே மதிக்கவேண்டிய அறிவுரைகளை மிதித்ததனால் தானே இந்தக்கண்ணீர். அன்று இளமையின் துடிப்பில் வாயால் பேசமுடிந்த அவளால். இன்றைய அவளது நிலையில் தனது தவறை உணர்ந்து வாழமுடியவில்லை. 5 வருடத்திற்கு முன்னால் ஒளிந்தவள் தான் இன்னும் ஒளிந்தபடியே திரிகிறாள்.

எங்கள் கல்லூரி வாழ்வில் கசப்பாக. கூடவே வந்து கொண்டி ருக்கின்ற ஒரு வடுவான நிகழ்வாக போனது செல்வியின் வாழ்க்கை. செல்வி, சிவா பிரியாத காதல் ஜோடி கள். காதலர்களாக இருந்தாலும் மற்றவர் முன்னால் விலகி நடந்த ஒரு சில காதல் ஜோடிகள் முன், யாரைப்பற்றியும் வருத்தம் இன்றி கைகோர்த்து நடந்து சென்றவர்கள். அவர்களது நெருக்கம் பெற்றவர் களுக்கு சந்தேகத்தை ஏற்படுத்தியது. செல்வியின் பெற்றோர்கள் திருமணம் செய்து கொள்ளக்கூறி வற்புறுத்தினார் கள். தாலி என்ற ஒரு நூலும் இருவரது சாட்சியுடன் கையெழுத்து போட்டு நடைபெறுகின்ற சடங்குகள் தங்கள் காதலுக்குத் தேவையில்லை என்று எத்தனை கதை அளந்தார்கள். எனக்கு சிவா மேல் நம்பிக்கை உண்டு. சிவாக்கு என் மேல் நம்பிக்கை உண்டு இதை விட வேறென்ன வேணும் என்று ஒரு முறை எனது கேள்விக்கு விடை வந்தது. புரட்சி புதுமை என்று பேசுபவர்கள் வாழும் முறைவேறு. இந்த புரட்சியையும் புதுமையையும் இப்படி ஒரு சிலரின் வாழ்வைத்தான் சூறையாடிச் சென்று போனது. சம்பிரதாய சடங்குத் திருமணமோ, பதிவுத் திருமணமோ எதுவுமே இன்றி நம்பிக்கையில் வாழ்வோம் என்று செல்வி வாழ வெளிக்கிட்டாள். அத்துடன் அவளுடனான தொடர்புகளை செல்வியின் வீட்டில் துண்டித்துக்கொண்டார்கள். சிவாவுக்கு வீட்டில் திருமணம் பேசி அவனும் திருமணத்துக்குச் சம்மதம் தெரிவித்த விடயம் செல்வியின் காதுகளில் விழும்வரை, அந்த முறிந்து போன உறவுகள் செல்விக்கு எந்தத் தாக்கத்தையும் ஏற்படுத்தியதாக தெரியவில்லை.

அவளைச் சுற்றியிருந்தது நாகரீகமும் புதுமையும் தான். அந்த உறவுப்பெண்ணொருத்தியை மணந்து கொண்டான். எந்த ஆதாரம் என்ன சாட்சி அவனிடம் நியாயம் கேட்க? நம்பிக்கை என்று ஆரம்பமானது நம்பிக்கை எங்கே போனது. அக்னி சாட்சியாக அருந்ததி பார்த்து, சுற்றம் சூழல் சாட்சியாக, வாழ்த்துகளுடன் வாழ்க்கையில் நுழைந்தவர்கள் கூட பாதை மாறிப்போன கதைகள் உண்டு. இந்த உறவும் நம்பிக்கையில் புதுமையின் கிளர்ச்சியில் ஆரம்பித்து இரகசியமாக முடிந்தது.

அவனால் எந்த பாதிப்பும் இல்லை என்பதாக காட்டிக்கொண்டாள் செல்வி.

கவனமெடுக்கிறேன். மாதம் ஒருமுறை என்னைப் பார்க்கும் சாட்டில் தனது இரண்டாவது கணவனிடம் கதை சொல்லி தன் சேயைப்பாக்க பாசத்தோடு வரும் தாயை பார்க்கையில் பரிதாபம் தான் வருகிறது. தான் செய்த தவறால் ஒரு குழந்தையின் எதிர்காலம் கேள்விக்குறியாக இருப்பதை அவள் உணராமல் இல்லை. இன்று இரண்டு

நம்பிக்கையில் உருவான சின்னம் தான் கதிர். அந்தக் கருவை அழிக்கச் சொல்லி சிவா கூறிவிட்டான். அதை செல்வி மறுத்ததனால் அவர்களது விரிசல் நீண்டது. அதை வைத்து தன்னை உறவு கொண்டாடக்கூடாது என்று பேசினான். அப்பொழுது தான் செல்வி தலைகுனிந்து நின்றாள். நல்ல தோழியாக என்னை நாடி வந்தவள் ஆலோசனை கேட்டாள். ஒரு சிசுவைக்கொல்வதில் எனக்கு உடன்பாடிருக்கவில்லை. பாவத்தின் மேல் பாவம் செய்யாதே என்று ஒரு வரி சொல்லி வைத்தேன்.

திருமணப்பத்திரிகை அவளது கைகளில் கிடைத்தது. எதுவுமே நடக்காத மாதிரி சிவா நடந்து கொண்டான். சிவாவின் திருமணம் முடிந்தது. கொழுத்த சீதனத்துடன் என்னிடம் வந்து அடைக்கலம் புகுந்து கொண்டாள். ஊர் பழிக்கு அஞ்சினாள். பெற்றோர் முகம் பார்க்க பயந்தாள். இரு இளசுகள் செய்த தவறால் உருவாகிப்போன அந்த பிஞ்சு என்ன பாவம் செய்தது? வாடகைக்கு வீடு எடுத்து வேலைக்கு ஆள் அமர்த்தி இரகசியமாக குழந்தையைப் பெற்றெடுத்து. இரகசியமாக வளர்த்தாள். இப்போ இந்த விடுதியில் அந்தக் குழந்தை தஞ்சம். பிறப்பின் காரணமோ. இங்கு வாழும் காரணமோ அதுக்கு தெரியாது. ஊர்க் குழந்தைகள் பலர் ஏதேதோ காரணத்துக்காக இந்த விடுதியில் வந்து தங்கியிருக்கிறார்கள் .

இந்த விடுதியில் உள்ள குழந்தை என்றதைத் தாண்டி என் நண்பியின் குழந்தை என்ற உரிமையோடு நான் குழந்தைகளுக்கு தகப்பனாக வாழ்கின்ற சிவாவுக்கு இது பற்றி சிந்தனை வந்திருந்திருந்ததாக் தெரியவில்லை. அவனது நம்பிக்கைக்கு தான் இன்னொரு பெண் வந்துவிட்டாளே.! உறவுகள் தெரியாது ஊர் ஏளனத்தில் நாளை தலைகுனிந்து வாழப்போவது இந்த நம்பிக்கையின் சின்னம் தானே. தடுக்கிவிழும் போது தாங்கிப்பிடிக்க ஒரு தந்தை. பாசம் காட்ட ஒரு தாய் இன்றி தளர்ந்து போகப்போவது இந்த நம்பிக்கையின் சின்னங்கள் தானே. நம்பிக்கை வைத்தவர்கள் வாழ்க்கை தொடர்கதையோ.. ????? நம்பிக்கையின் சின்னங்கள் வாழ்க்கை கேள்விக்குறியோ..?!

நீங்கள் வாழ்வில் வெற்றி பெற வேண்டும் என்றால் உங்களுக்கு நம்பிக்கை அதிகமாக இருக்க வேண்டும் என்று பலர் கூறக் கேட்டு இருப்பீர்கள். இது தவிர இதுவரை நடந்த ஆய்வுகள் பலவற்றில், அதிக நம்பிக்கை கொண்டவர்களாக இருக்கும் போது, உங்களது வழியைத் தாங்கும் சக்தி, மன உறுதி மற்றும் மன தைரியம் ஆகியவை அதிகமாகும் என்று கண்டறியப் பட்டுள்ளது. இது தவிர உங்களுடைய ஆரோக்கியம், உறவு மற்றும் செயல் திறன் ஆகியவற்றை அதிகப் படுத்துவதில் நம்பிக்கை அதிக பங்கு வகிக்கின்றது




என்பதும் அனைவரும் அறிந்ததே. 'ஆனால் அளவுக்கு மீறினால் அமுதமும் நஞ்சு' என்பதும் நம்பிக்கைக்கும் பொருந்தும். அதீத நம்பிக்கை உங்களை படுகுழியிலும் தள்ளலாம். பொதுவாக அதிக போட்டிகள் நிறைந்த இந்த உலகத்தில், முக்கிய வியாபார உலகில் உங்களுடைய நிலைமையை மிகுந்த தன்னம்பிக்கையுடன் அணுகுவது நிறைய பிரச்சினைகளை உண்டு பண்ணலாம். நம்பிக்கை அதிகமாக இருப்பது உங்களுக்கு கீழ்க்கண்ட ஐந்து வழிகளில் பிரச்சனைகளை உருவாக்கலாம்.

**1. நானே மேலானவன் என்ற உணர்வு**


சராசரியாக நம்மில் பெரும் பாலானோர் நாம் மற்றவர்களை விட உயர்ந்தவர்கள், மேலானவர்கள் என்னும் எண்ணம் அதிகம் கொண்டவர்களே. இதை நான் சொல்லவில்லை. பல ஆராய்ச்சிகள், ஆய்வு முடிவுகள் இதை உறுதி செய்து விட்டன. நாம் இந்த விஷயத்தில், படிப்பில், வண்டி ஓட்டுவதில், ஆரோக்கியத்தில் மற்றவர்களை விட நல்ல நிலைமையில் இருக்கின்றோம் என்ற எண்ணம் கொண்டுள்ளோம். நம்மை விட சுமார் 80 சதவிகிதம் பேர் மேலானவர்களாக இருந்தாலும், நாமும் அந்த மேலான 20 சதவிகிதம் பேரில் தான் இருக்கின்றோம் என்று நம்மை நாமே ஏமாற்றிக் கொண்டு இருக்கின்றோம்.

வியாபார உலகில் அதிகம் தன்னம்பிக்கை கொண்டவர்களாக இருப்பது உங்களுக்குப் பல வகையில் உதவினாலும், உங்களுடைய திறன்களை பெரிது படுத்தி நினைத்துக் கொள்வது தவறாகவும் முடியலாம். நான் இதில் வல்லவன் அதில் வல்லவன் என்று நினைத்துக் கொள்வது உங்களது காலை நீங்களே வாரிக் கொள்வது போல.

உங்களால் எது முடியும் ஏதும் முடியாது என்பதில் தெளிவாக இருங்கள்.

**2. இது எனக்கு மிக எளிது என்னும் இறுமாப்பு.**

நாம் ஒன்றை கவனமாக கவனித்துக் கொண்டே இருக்க வேண்டும். எந்த நேரத்திலும் நம்முடைய அதீத தன்னம்பிக்கை இறுமாப்பாக மாறி விடக் கூடாது. அது நம்முடைய வாழ்வை கொஞ்சம் கொஞ்சமாக அழித்து விடும். நான் எப்போது நினைத்தாலும் புகைப் பழக்கத்தை நிறுத்தி விட முடியும், எனக்குத் தான் இது நன்றாகத் தெரியுமே நான் ஏன் தயார் செய்ய வேண்டும் என்று நீங்கள் அடிக்கடி நினைக்கின்றீர்கள் என்றால் இப்பொழுதே அதை மாற்றிக் கொள்ளுங்கள்.



பின்னால் வர இருக்கும் பிரச்சனைகளை நீங்கள் குறைத்து மதிப்பிட்டால் அதற்கு உங்களை நீங்களே தயார் செய்து கொள்ள மறந்து விடுவீர்கள். அனைத்தும் வாழ்வில் எளிதாகக் கிடைத்து விடும் என்ற நினைப்பு உங்கள் சுய கௌரவத்தைக் குலைக்கும் வாய்ப்பும் அதிகம். மேலும் நீங்கள் ஒவ்வொரு முறையும் முதல் தடவையிலேயே வெற்றி பெறுகின்றீர்கள் என்றால், பெரிய போட்டியில் நீங்கள் பங்கு பெறுவதே இல்லை என்று அர்த்தம்.

**3. கனவிற்கும், தன்னம்பிக்கைக்கும் உள்ள இடைவெளியை மறந்து விடுவது**

இது பெரும்பாலும் அனைவருமே செய்யும் தவறு. நல்லதை மட்டுமே நினைக்க வேண்டும் என்பது உண்மை தான். அதற்காக உரிய முயற்சியை எடுக்காமல் பகல் கனவு காண்பது எந்த விதத்திலும் உங்களுக்கு உதவி செய்யாது. எண்ணங்கள் வலிமையானவை. நீங்கள் நினைத்தது நடக்கும் என்பது போன்ற தத்துவங்கள் இன்னும் விஞ்ஞான ரீதியாக நிரூபிக்கப் படவில்லை. இது உண்மையாக இருக்கும் பட்சத்தில் நமக்கு லாட்டரி விழ வேண்டும் என்று பல வருடங்களாக கனவு காணும் அனைவரும் இன்று லட்சாதிபதியாக இருக்க வேண்டும்.

உயர்ந்த எண்ணங்கள் மட்டுமே உங்களுக்கு வெற்றியைத் தந்து விடாது. இத்துடன் உங்களுக்கு உயரிய நடத்தையும் மிகவும் அவசியம்.

**4. உங்கள் திட்டப்படியே அனைத்தும் நடக்கும் என்ற எண்ணம்**

எல்லாம் நல்லதாகவே நடக்கும் என்ற நம்பிக்கை வேறு. ஆனால் நிச்சயமாக அதில் எந்த தடங்கலும் வராது என்று உங்களை நீங்களே ஏமாற்றிக் கொண்டு இருப்பது மடமை. இது போன்று நம்பிக்கையான வாசகங்களை உதிர்த்தாலும் வெற்றியாளர்கள் எப்பொழுதுமே ஒரு மாற்று வழியை கை வசம் வைத்து இருப்பார்கள்.

எந்த முன் யோசனையும் இல்லாமல், கூடுதல் வருமானத்திற்காக அதிக வேலையை எடுக்கப் போகின்றோம் என்று ஒரு நிறுவனம் முடிவு செய்தால், அதனால் ஏற்படும் பிரச்சனைகளை சமாளிக்க முடியாமல் பொய் விடும். இது வரவிருக்கும் தடங்கலைத் தடுக்கக் கண்ணைப் பொத்திக் கொள்வது போன்றது.

**5. வெளுத்ததெல்லாம் பால் என்று நம்புவது**

எல்லா விஷயத்திலும், ஒவ்வொருவரிடமும் தவறு கண்டு பிடிப்பது எவ்வளவு தவறானதோ, அது போலவே அனைவருமே நல்லவர்கள் என்று நினைப்பதும் தவறு. இது உங்களை மற்றவர்கள் மத்தியில் ஏமாளியாகவும் காட்டலாம். எனவே கவனமாக இருப்பது முக்கியம். மேலும் நீங்கள் தவறான ஒரு நபரின் மீது நம்பிக்கை வைக்க நேரிடலாம். அதீத நம்பிக்கை இது போன்ற பல நேரிடையான மற்றும் மறைமுக பிரச்சனைகளை நமக்கு ஏற்படுத்தலாம். எனவே நாம் சரியான அளவில் நம்பிக்கையும், அதே அளவு சந்தேகமும் கொண்டு இருப்பது அவசியம். தேவை அற்ற நம்பிக்கையைத் தவிர்த்து, சரியான அளவை நீங்கள் தெரிந்து கொண்டால் வெற்றி நிச்சயம்.


WIN
1000
Mountain Bikes
Mom, Me & My MILO
WP/GT/4448
போட்டி விதிமுறைகள்:
1. இந் நிகழ்ச்சித்திட்டம் செல்லுபடியாவது 2015 ஒக்டோபர் 19ம் திகதி காலை 08.00 மணிமுதல் நவம்பர் 25ம் திகதி இரவு 11.59 வரை மட்டுமே. பங்குபற்றுபவர்கள் நிகழ்ச்சித் திட்டதின் காலத்திற்குள் தமது பங்கேற்பினை மேற்கொள்ள வேண்டும்.
2. பங்குபற்றுவோர் உள்நுழைவதற்கு நீங்கள் உங்கள் குழந்தையுடன் மைலோ பக்கடுடனான புகைப்படமொன்றை பெயர் மற்றும் தொலைபேசி இலக்கத்தை குறிப்பிட்டு
• த.பெ. 1711, கொழும்பு எனும் முகவரிக்கோ
• Milo.Srilanka@lk.Nestle.com எனும் ஈமெயில் முகவரிக்கோ அல்லது
• www.facebook.com/MiloSriLanka எனும் பேஸ்புக் பக்கத்திற்கு அனுப்பி வைத்திருக்க வேண்டும்.
3. ஒரு விண்ணப்பதாரி முடியுமான வரை விண்ணப்பங்களை அனுப்ப முடியும் என்பதோடு, ஒரு விண்ணப்பதாரிக்கு ஒரு பரிசு மட்டுமே உரித்தாகும்.
4. இந்நிகழ்ச்சியில் நெஸ்லே நிறுவனத்தின், அதனோடு இணைந்த நிறுவனங்களின், விளம்பர நிறுவனத்தின் அல்லது ஊடக பங்களிப்பினை வழங்கும் நிறுவனத்தில் சேவையாற்றுவோரின் குடும்ப அங்கத்தவர்களற்ற 08 முதல் 16 வயதிற்கு இடைப்பட்ட குழந்தைகளுடைய இலங்கை குடியுரிமையுடைய தாய்மார்களுக்கு மட்டுமே.
5. விண்ணப்பங்கள் வாரந்தோறும் சீட்டிழுப்பிற்கு உட்படுத்தப்படுவதோடு மவுண்டன் சைக்கிளொன்றை வெல்வதற்கான வாய்ப்பளிக்கப்படும்.
6. முழு நிகழ்ச்சி திட்டத்தின் காலப்பகுதிக்குள் 1000 வெற்றியாளர்கள் தெரிவுசெய்யப்படுவர்.
7. வெற்றியாளர்கள் கடிதம் மூலம் அறியத்தருவதோடு பரிசினை பெறுவதற்கு அக்கடிதத்தினை கையளிக்க வேண்டும்.
8. வெற்றியாளர்கள் பரிசினை பெறும் போது நெஸ்லேயினால் வழங்கப்படும் கடிதத்தின் மூலப்பிரதி கையளிக்கப்பட வேண்டும் என்பதோடு தேசிய அடையாள அட்டை அல்லது கடவுச்சீட்டின் மூலம் அடையாளம் உறுதிசெய்யப்படல் வேண்டும்.
9. 2015 டிசம்பர் நடைபெறும் மைலோ உற்சவத்தின் போது வெற்றியாளர்கள் பரிசினை பெறுவதற்கான அழைப்புவிடுக்கப்படுவதோடு அத்தினம் மட்டுமே குறித்த பரிசு வழங்கப்படும்.
10. இவ்வுற்சவத்தில் வெற்றியாளர்கள் மற்றும் தாய்மார்கள் முழுக் குடும்பத்துடன் பங்குகொள்ளலாம்.
11. நிகழ்ச்சி பற்றி அல்லது வெற்றியாளர்கள் பரிசினை பெறுவது சம்பந்தமான பிரச்சினைகள் போன்றவற்றிற்கு நெஸ்லே லங்கா வாடிக்கையாளர் சேவை இலக்கத்திற்கு அழையுங்கள். 0114724724.
12. பரிசிற்கான உத்தரவாத கோரிக்கைகள் (warranty) சிங்கர் ஸ்ரீ லங்கா நிறுவனத்திடம் மட்டுமே பெற்றுக்கொள்ள முடியும் என்பதோடு அதுபற்றி 0115400400 இலக்கத்தினூடாக தொடர்பு கொள்ளலாம்.
13. மேலும் போட்டி விதிமுறைகள் பற்றி அறிந்திட https://www.facebook.com/notes/480492602121687/ எனும் பேஸ்புக் பக்கத்திற்கு உட்பிரவேசியுங்கள்.
Nestlé
MILO
Chocolate Malt Food Drink
ENERGY
Fuelling
the winning spirit
Nestlé
Good Food, Good Life

# ஏமாறாதீர்!

## எஸ்-லோன் இலட்சினையை கவனியுங்கள்




நீங்கள் வாங்கும் நீர்க்குழாய்களிலும், பொருத்துக்களிலும் எஸ்-லோன் இலட்சினை இல்லையெனில் அவை எஸ்-லோன் அல்ல.

எஸ்-லோன் இலட்சினை பொறிக்கப்பட்டுள்ளதா என்று சரி பார்த்து, வாங்குங்கள்.

**எஸ்-லோன் லங்கா (பிரைவட்) லிமிட்டெட்**
கெபிட்டல் மஹாராஜா நிறுவனத்தின் ஓர் துணை நிறுவனமாகும்.

515/7, டி.பி ஜெயா மாவத்தை, கொழும்பு-10 | தொ.பே: 011 4 760 100
பக்ஸ்: 011 5 352 741 | மின்னஞ்சல்: slonsales@slon.maharaja.lk

S-lon
வாழ்விற்கு நீர்



# வாருங்கள், இலங்கையின் மிகச் சிறந்த சேவை அணியில் இணைந்து கொள்ளுங்கள்

### எமது இடத்தின் முகத்தோற்றம்

செயல்வீரம் நிறைந்த எமது சேவை அணியில் இணைந்து கொள்வதற்காக வேடிக்கையான, நட்புறவான மற்றும் விற்பனையில் கூடிய கவனம் செலுத்துகின்ற சில்லறை விற்பனை நிலைய இணை உத்தியோகத்தர்களை நாம் எப்போதும் தேடிக் கொண்டிருக்கின்றோம். நீங்கள் இலங்கையின் மிகவும் அங்கீகாரம் பெற்ற வர்த்தக குறியீடுகளுள் ஒன்றில் வேடிக்கையான, சவால்மிக்க அதேநேரம் நெகிழ்ச்சித் தன்மையுள்ள ஒரு வாய்ப்பை தேடிக் கொண்டிருக்கின்றீர்களா?

## வாடிக்கையாளர் சேவை இணை உத்தியோகத்தர்கள்

இதில் இணைந்து கொள்வதற்கான திறனாற்றலை நீங்கள் கொண்டுள்ளீர்களா?

- இதயத்தில் இருந்து சேவை வழங்குவதற்கான பேருவகை
- மக்களுடனும் தொழில்நுட்பத்துடனும் இணைந்து பணியாற்றுவதில் மகிழ்ச்சியடைதல்
- சவால்மிக்க சூழ்நிலைகளில் அமைதியாக இருத்தல்
- எமது வாடிக்கையாளர்களுக்கு எது தேவை என்பதை புரிந்து கொள்ளல்
- தொழில்வாண்மையாளராக திகழ்கின்ற நிலையிலும் கூட அற்புதமான நகைச்சுவையுணர்வு
- வார இறுதி நாட்கள் மற்றும் மாலை நேரங்களில் வேலை செய்யக் கூடிய நெகிழ்ச்சித் தன்மை
- சில்லறை விற்பனை துறையில் முன்னனுபவத்துடன், இலக்குகளை அடைதல் மற்றும் அவற்றை தாண்டிச் செல்வதில் நிருபிக்கப்பட்ட கடந்தகால பதிவானது ஒரு மேலதிக தகைமையாக இருக்கும். நீங்கள் நீங்களாகவே இருங்கள், செயல்வீரர்கள் நிறைந்த எமது அற்புதமான சில்லறை விற்பனை அணியில் ஒரு அங்கமாக, சக்தி பெற்றிருப்பதை உணர்ந்து பாருங்கள்.

## நிலப்பகுதி பொறுப்பதிகாரி

யாழ்ப்பாணம்

- கம்பனியின் குறிக்கோள்களை அடைந்து கொள்ளும் பொருட்டு, குறித்தொதுக்கப்பட்ட புவியியல் நிலப்பகுதியின் வியாபார திட்டங்களை முகாமைத்துவம் செய்தல்.
- தொடர்ச்சியான வெற்றியை உறுதிப்படுத்தும் முகமாக செயலாற்றலை கண்காணித்தல்.
- வெளியீட்டின் செயற்திறனை உறுதிப்படுத்துவதற்காக, வெளியீடு அல்லது பெறுபேறுகள் தொடர்பில் அணியினருக்கு தெளிவானதொரு கவனக்குவிப்பையும் புரிந்துணர்வையும் வழங்குதல்.
- வழிமுறைகளின் சீரான தன்மையை உறுதிப்படுத்தும் விதத்திலமைந்த முக்கியமான புதிய பணிப்புரைகளை நிறைவேற்றுவதற்காக மூலோபாயங்கள் அல்லது வழிமுறைகளை உருவாக்குதல்.
- முக்கியமான புதிய பணிப்புரைகளை நிறைவேற்றுவதற்கு ஒத்துழைப்பு அளிக்கக் கூடியவாறு நிறுவன முறைமைகள் சரியான விதத்தில் காணப்படுகின்றன என்பதை உறுதிப்படுத்தல்.
- நிறுவன இலக்குகளை, சொந்த திணைக்களப் பிரிவுக்கான நடைமுறைப்படுத்தக் கூடிய இலக்குகளாகவும் ஒரு மூலோபாயமாகவும் மாற்றியமைத்தல்

நபரின் தகைமை விபரங்கள்:

- பல்கலைக்கழக பட்டம் அல்லது அதற்கு சமமான தொழில்சார் தகைமை
- விற்பனை துறையில் 1-2 வருடங்கள் அனுபவம்

நீங்கள், மேற்குறிப்பிடப்பட்ட நபராக திகழ்கின்றீர்கள் என்றும், மேலே விபரிக்கப்பட்ட பணியின் செயற்பரப்பை மேற்கொள்வதற்கு அவசியமான பண்புகளை கொண்டிருக்கின்றீர்கள் என்றும் நீங்கள் கருதினால், இந்த விளம்பரம் பிரசுரிக்கப்பட்டு 10 நாட்களுக்குள் மிக இலகுவான முறையில் **careers@dialog.lk** இற்கு மின்னஞ்சல் அனுப்புங்கள்.

twitter.com/dialoglk facebook.com/dialog.lk

உங்களுக்கு கொண்டு வருவது
இலங்கையின் பிரபலமான
தொலைத் தொடர்பு சேவை வழங்குனர்
ஸ்லிம் நீல்சன் மக்கள் விருது 2015

Dialog
எதிர்காலம் இன்றே.

an axiata company www.dialog.lk


இப்பத்திரிகை கொழும்பு - 6, வெள்ளவத்தை, பெரகும்பா பிளேஸ், 1/5 ஆம் இலக்கத்தில் உள்ள லாண்ட் மார்க் என்டர் பிறைஸ் ஸ்தாபனத்தால், 2015 நவம்பர் 04ஆம் திகதி வெளியிடப்பட்டது.